**இலங்கை மின்சார சபை - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மின்சார சபையினதும் (சீஈபீ) அதன் துணைக் கம்பனிகளினதும் (குழுமம்) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமென நான் கருதும் அவதானிப்புக்களும் கருத்துரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுள்ளன. லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட் மற்றும் ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (பிரைவட்) லிமிடட் ஆகியன தவிர்ந்த ஏனைய துணைக் கம்பனிகளது நிதிக்கூற்றுக்கள், குறித்த துணைக் கம்பனிகளது பணிப்பாளர் சபைகளால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனங்களால் கணக்காய்வு செய்யப்பட்டன. அதேவேளை, லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட் மற்றும் ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (பிரைவட்) லிமிடட் ஆகியவற்றின் நிதிக்கூற்றுக்கள் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குழுமத்தினதும் சபையினதும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையினதும் குழுமத்தினதும் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினையும் குழுமத்தினையும் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையினதும் குழுமத்தினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையும் குழுமமும் அவற்றின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையினதும் குழுமத்தினதும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுமத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் குழுமத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையினதும் குழுமத்தினதும் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையினதும் குழுமத்தினதும் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபையும் குழுமமும் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையினதும் குழுமத்தினதும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 ஒன்றித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் மீது கீழே தரப்பட்டுள்ள அவதானிப்புக்கள் காரணமாக என்னால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக் கப்பட்டது. | | |
| (அ)வரை. லங்கா கோல் கம்பனி (எல்சீசீ) | | |
| i. 2016 செப்தெம்பர் 19 முதல் 2018 ஏப்ரல் 09 வரையிலான கால கட்டத்தில் நிலக்கரி இறக்குமதியின் சரியான கொடுக்கல் வாங்கல் மதிப்பை அறிவிக்காதது குறித்து இலங்கை சுங்கத்தால் ரூபா 205,000,000 தொகை தண்டமாக கம்பனிக்கு விதிக்கப்பட்டிருந்ததுடன், இயக்குநர்கள் நிதிக்கூற்றுக்களில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் 2018 திசெம்பர் 12 ஆந் திகதி இத் தண்டப்பணம் தீர்மானிக்கப்பட் டிருந்தது. இருப்பினும், நிகழத்தக்க பொறுப்பிற்கான ஏற்பாடுகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக் களில் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | இது ஒரு நிகழத்தக்க பொறுப்பாக இனங்காணப்பட்டு ஏற்பாடு மேற்கொள்ளப் படாமைக்கான காரணத்தையும் குறிப்பிட்டு எல்சீசீ இன் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 25 இன் கீழ் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும். | நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களிற்காக ஏற்பாடு மேற்கொள ளப்படுதல் வேண்டும். |
| ii. வரி அறிவித்தலில் காண்பிக்கப்பட் டுள்ள பொருளாதாரச் சேவைக் கட்டணத்திற்கும் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நேரொத்த தொகைக்குமிடையே ரூபா 100,327,636 வேறுபாடு அவதானிக் கப்பட்டது. | எல்சீசீ இனால் பெ.சே.வ. பட்டியல்களை வழங்குவதிலேற்பட்ட தாமதம் காரணமாக விளைந்த குறை ஏற்பாட்டு நிலைமையே இதுவாகும். சேவை வழங்குநர்களிடமிருந்து சிட்டைகள் முறையற்ற விதத்தில் கிடைக்கின்றமை/பெறுவனவு மீளளித்தல் காணமாக தாமதம் ஏற்பட்டிருந்தது. 2018 இலிருந்து இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள குறை | தொடர்புடைய கால த்தில் பொறுப்புக் களை அங்கீகரிப்பத ற்கு உள்ளகக் கட்டு ப்பாடு பலப்படுத்தப் படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஏற்பாட்டிற்காக 2019 இல் எல்சீசீ பதிவுகளை மேற்கொள்ளும். | |
| iii. நிலக்கரியினை இறக்குமதி செய் கையில் சுங்க நோக்கத்திற்கான பெறுமதியினை நிச்சயிக்கையில் உண்மையில் ஏற்படாதுள்ள நொஷ னல் சீராக்கமாக சுங்கத்திலிருந்து அகற்றப்பட்ட பெறுமதியின் மீது 10 சதவீத எல்லையொன்று சேர்க் கப்பட்டிருந்தது. இருப்பினும், கம்பனி அந்த 10 சதவீத இலாப எல்லைத் தொகையான ரூபா 3,723,718,278 இனை வருமானத் துடன் கூட்டியிருந்ததுடன் அதன் பின்னர் அத்தொகையினை கழிவாக கடன்பட்டோருக்கு வழங்கி அதனை விற்பனைக் கிரயத்திற்கு சாட்டியிருந்தது. அதன் விளைவாக, விற்பனைக் கிரயமும் வருமானமும் ஒத்த தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இ.மி.ச. இற்கு பெ.சே.வ. பட்டியல்களை வழங்கும் போது கிரயத்தின் மீது சுங்கவரி எல்லையொன்றை சேர்க்குமாறு எல்சீசீ பணிப்புரை வழங்கியுள்ளது. ஊள்நாட்டு இறைவரித் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரின் பங்குபற்றலுடன் 2018 யூன் 28 ஆந் திகதி இடம்பெற்ற கூட்டத்தினைத் தொடர்ந்து இந்த விலையிடல் பொறிமுறை சேர்த்துக்கொள்ளப்பட்டது. இ.மி.ச. இற்கான பட்டியல்கள் மீதான எல்சீசீ இன் பெ.சே.வரிக்கான அடிப்படைப் பெறுமதி, சுங்க நோக்கங்களிற்கான பெறுமதியினைக் காட்டிலும் குறைவாக இருக்க முடியாதென உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அதிகாரியால் தெரிவிக்கப்பட்ட கருத்து கூட்டக் குறிப்பில் காணப்படுகின்றது. அதற்கமைய, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அதிகாரியின் வழிகாட்டலிற்கு இணங்க 10 சதவீதம் சேர்த்துக்கொள்ளப்பட்டது. அது முதல் இ.மி.ச. அந்த வழிகாட்டலை எதிர்த்துவந்துள்ளதுடன் இது குறித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு 2018.09.07 ஆந் திகதி எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இ.மி.ச. இன் அந்தக் கடிதத்திற்கான பதில் இன்னும் கிடைக்கவில்லை. அது முதல் 10 சதவீத சுங்க எல்லை பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட்ட போதிலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வெளியீட்டுப் பெ.சே.வ. ஆக எதுவும் அனுப்பிவைக்கப்படவில்லை. ஆகையால், வருமானம் | இலங்கைக் கணக் கீட்டு நியமங்களின் தேவைப்பாடுகளிற்கு அமைவாக பதிவேடு கள் பேணப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அதிகரித்துக்கூறப்பட்டமைக்கா ன காரணமாக அது காணப்படுகின்றது. | |
| iv. ஆறு ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், நிலக்கரியினை குறைத்து வழங்கியிருந்தமை தொடர்பில் தௌரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் கம்பனி லிமிடட் (TISCL) இடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 539,192,079 தொகையினை இணங்கப்பட்ட முறையில் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் ஊடாக அறவி டுவதற்கு கம்பனி தவறியிருந் ததுடன் நட்டக் கடனிற்கான ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | தௌரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் கம்பனி லிமிடட் (TISCL) இன் தீர்ப்பனவுகள் உயர்மட்ட குழுவொன்றால் கையாளப்பட்டது. குழு இக்கடனை ஐயக்கடன் என கருதாததுடன் நிலக்கரியினை வழங்குகையில் கொள்வனவாள ருக்கு இதனை அறவிடுவதற்கான வாய்ப்புக் காணப்படுகின்றது. எமக்குக் கிடைத்த தகவல்களிற்கமைய தீர்வுத் திட்டமானது அமைச்சரவையின் தீர்மானத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>CSCL இன் படி அமைச்சரவையின் தீர்மானம் இதுவரை கிடைத்திருக்கவில்லை. நிலுவையினை அறவிட முடியாது என்பதாக CSCL இனாலோ அல்லது குழுவினாலோ கருத்துத் தெரிவிக்கப்படாத போதிலும் தீர்க்கும் முறை தொடர்பில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. ஆகையால், நட்டக்கடன் நிலைமைக்கான சான்று காணப்படவில்லை. | நிலுவையினை அறவி டுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| v. முன்னைய ஆண்டின் கணக்காய் வில் மெய்மையாய்வு செய்வதற்கு முடியாது காணப்பட்டு முன்கொ ண்டு வரப்பட்டிருந்த ரூபா 971,868 கூட்டுத்தொகையான பெறவேண்டிய பொருளாதாரச் சேவைக் கட்டணம் (ESC) மற்றும் நிறுத்திவைத்தல் வரி (WHT), ரூபா 65,474,540 தொகையான செலுத்த வேண்டிய வருமான வரி, ரூபா 3,371,326 தொகையான தேசத்தைக் கட்டி யெழுப்புதல் வரி (NBT) மற்றும் ரூபா | மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு தனிப்பட்ட தொகை தொடர்பிலும் 2018 ஆம் ஆண்டிற்கான எல்சீசீ இன் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களில் (குறிப்பு 21, 23) எல்சீசீ இது தொடர்பில் பின்வருமாறு விபரமாகக் குறிப்பிட்டுள்ளது.<br><br>**VAT**<br>2017 இன் இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய உள்ளீட்டு VAT ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 12,758,801 சரியான | முன்னைய காலப்ப குதிக்கான வழுக்க ளின் தன்மை நிதிக் கூற்றுக்களில் வெளிப் படுத்தப்படுதல் வேண் டும். |

12,758,801 ஆன பெறுமதிசேர் வரி (VAT) என்ப முன்னைய ஆண்டிற்கான சீராக்கமாக நிறுத்திவைத்த உழைப்புக்களிற்கு எதிராக சாட்டப்பட்டிருந்தன. இருப்பினும், முன்னைய ஆண்டின் வழுவின் தன்மை நிதிக்கூற்று க்களில் வெளிக்காட்டப்பட்டிருக் கவில்லை.

நிலைமையினை வெளிப்படுத்துவதற்காக சீராக்கப்பட்டது. உள்ளீட்டு வரி மீளளித்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கான சாத்தியத்தன்மை குறித்து விசாரிப்பதற்காக ல்சீசீ எஉள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளது. 2002 இன் 14 ஆம் இலக்க VAT சட்டத்தின் 22(5) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி செலுத்தியுள்ள உள்ளீட்டு VAT இனை மீளளிக்க முடியாது என்பதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 2018.06.14 ஆந் திகதி அறிவித்திருந்தது. அதற்கமைய, 2018.07.26 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அனுமதி பெறப்பட்டு மேற்குறித்த பெறவேண்டிய தொகை சீராக்கப்பட்டது.

**NBT**

முன்னர் கம்பனியினால் செலுத்தப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி பெறவேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டுள் ளதுடன் அது ரூபா 2017 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 3,371,326 ஆகக் காணப்பட்டது. எல்சீசீ நிலக்கரி இறக்குமதியாளராகவும் விற்பனையாளராகவும் காணப்படுவதனால் செலுத்திய NBT இனை மீளப்பெறுவதற்கு அதற்கு உரிமையில்லை. ஆகையால் 2018.07.26 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அனுமதி பெறப்பட்டு மேற்குறித்த தொகை ஐந்தொகையில் சீராக்கப்பட்டது.

**வருமான வரி**

------------------

2014/2015 மற்றும் 2013/2014 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய வரி முறையே ரூபா 2,049,484 மற்றும் ரூபா 3,590,678 மாத்திரம் என்பதாக

| | | |
|---|---|---|
| | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் உறுதிப்படுத்தியிருந்தது. ஆகையால், மேற்படி செலுத்த வேண்டிய ரூபா 11,703,151 தொகை இனிமேலும் தேவைப்படுவதில்லை என்பதனால் 2018.07.26 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அனுமதி பெறப்பட்டு மேற்குறித்த தொகை சீராக்கப்பட்டது.<br><br>வருமான வரிக்காக ரூபா 65,474,540 ஆன மேலுமொரு ஏற்பாடு காணப்படுகின்றது. இத்தொகையும் இனிமேல் தேவைப்படுவதில்லை என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது. ஆகையால், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இத்தொகையும் சீராக்கப்பட்டது.<br><br>**<u>ESC/WHT</u>**<br>அறவிடப்பட முடியாதுள்ள ESC மற்றும் WHT என்பவற்றின் கூட்டுத்தொகையான ரூபா 971,868 இனை பதிவழிப்பற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு அதற்கமைய நீண்டகால நிலுவை சீராக்கப்பட்டது. | |
| vi. இலங்கை மின்சார சபையினால் பொறுப்பேற்கப்பட வேண்டிய வரியென நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 12,241,774 பணிப்பாளர் சபையின் அங்கீகார மேனுமின்றி நிறுத்திவைத்த உழைப் புக்களிற்கு எதிராக சாட்டப்பட்டி ருந்தது. இருப்பினும் விபரங்கள் கணக்காய்விற்கு கிடைக்கப் பெறாமையால், கணக்கீட்டுப் பரிகாரத்தின் சரியான தன்மை யினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் உறுதிப்படுத்தியிருந்தவாறு வருமான வரிப் பொறுப்பிற்கு மேலதிகமாக 2014/2015 மற்றும் 2013/2014 ஆம் ஆண்டிற்காக நீண்டகாலமாக செலுத்த வேண்டிய வரியென முறையே ரூபா 2,049,484 மற்றும் ரூபா 3,590,678 காணப்பட்டது. ஆகவே பதிவழிக்கப்பட்டிருந்த செலுத்த வேண்டிய வரி இந்த இ.மி.ச. இடமிருந்து கிடைக்க வேண்டிய நேரொத்த தொகையாக இருக்கவில்லை. | கொடுக்கல் வாங்கல் களிற்கான உள்ளகக் கட்டுப்பாடு பலப்படுத் தப்படுதல் வேண்டு மென்பதுடன் கொடுக் கல் வாங்கல்களின் சரியான தன்மை யினை உறுதிப்படுத் துவதற்கு சான்றுகள் பேணப்படுதல் வேண் டும். |

| | | |
|---|---|---|
| vii. ரூபா 8,896,850 மீள்நிரப்பல் செலவினம் மீது செலுத்தவேண்டிய பெ.சே.வரியானது பெறுமதிசேர் வரிக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, அத்தொகையால் பெ.சே.வ. பொறுப்பு குறைத்துக் கூறப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட் டுள்ளவாறு எல்சீசீ இன் சிட்டைகளிற்காக மீள்நிரப்பப்பட வேண்டிய தொகையே இதுவாகும். எல்சீசீ இன் சேவைகளிற்காக இலாபஎல்லை சேர்க்கப்படவில்லை. மீளளிக்கப்பட வேண்டிய செலவுகள் பெ.சே.வரிக்கு உட்படுவதில்லை என்பது வரி ஆலோசகரின் அறிவுரையாகும். | கம்பனியின் பிரதான வணிகத்துடன் சம்பந் தப்பட்டதாக இச்செல வினம் காணப்படுவ தனால் செலவினம் மீள்நிரப்பப்படுகையி ல் பெ.சே.வ. செலுத்தப் படுதல் வேண்டும். |
| viii. இலகுக் கட்டணங்கள் (lightering charges) தொடர்பில் இலங்கை மின்சார சபையால் செலுத்தப்பட்டு இலங்கை கப்பற் கூட்டுத்தாபனக் கம்பனிக்குச் (CSCL) செலுத்தப்பட வேண்டிய ரூபா 15,870,104 தொகை CSCL இற்குச் செலுத்தப்பட்டோ அல்லது இ.மி.ச. இடமிருந்து கிடைத்த முற்பண மாகவோ காட்டப்பட்டிருக்கவில்லை. அத்துடன், மேற்படி இலகுக் கட்டணத்தை தீர்ப்பதற்காக சீஈபீ இடமிருந்து தேவையான நிதியினை அவர்கள் பெற்றுக்கொண்டிருந்த போதிலும், இலங்கை கபற்றற் கூட்டுத்தாபனக் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய தொகையாக அதனை கம்பனி கணக்கீடு செய்திருக்கவில்லை. | மேற்படி தொகை இலகுவான கட்டணங்கள் மீதான பெ.சே.வரியினை ஒத்திருந்த போதிலும், இலகுவான கட்டணத்தின் ஒரு பகுதியாக காணப்படவில்லை. இலகுவான கட்டணம் 0% VAT இற்கு உட்பட்டது என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் விதியொன்று வழங்கப்பட்டமை காரணமாக எல்சீசீ இத்தொகையினை CSCL இற்குச் செலுத்தியிருக்கவில்லை. அதேவேளை, 154 ஆவது கப்பலேற்றல் வரை ரூபா 67.7 மில்லியன் மேலதிக மதிப்பீடொனைன்றை விதித்து சுங்கத் திணைக்களம் கம்பனிக்கு இறுதி VAT மதிப்பீடொன்றை வழங்கியுள்ளது. சுங்கத்தினால் எடுக்கப்படுகின்ற எவையேனும் நடவடிக்கையினைத் தவிர்ப்பதற்காக மேற்படி கிடைப்பனவுத் தொகை இறுதி VAT மதிப்பீட்டின் ஒரு பகுதியை தீர்ப்பதற்காக பயன்படுத்தப்பட்டது. இந்த தீர்ப்பனவை எல்சீசீ மேற்கொள்ளாதிருப்பின் நிலக்கரி கப்பலிறக்குதலை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்படுவதற்கான சாத்தியம் நிலவியது. | கம்பனி கொடுக்கல் வாங்கல்களிற்காக சரியான கணக்கீட்டுத் தீர்வை பிரயோகித்தல் வேண்டும். |

ix. 154 ஆவது கப்பலேற்றல் வரை CSCL இற்குச் செலுத்த வேண்டிய ரூபா 33,959,892 பழைய காப்புறுதி, இலங்கை கப்பற் கூட்டுத்தாபனக் கம்பனியின் ரூபா 66,307,336 பழைய செலுத்த வேண்டியவை, ரூபா 18,075,801 நானாவிதக் கடன்பட்டோர், இ.மி.ச. இடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 4,677,508, இ.மி.ச. இடமிருந்தான ரூபா 1,760,500 ஏனைய பெறப்பட வேண்டியவை, ரூபா 85,887,776 ஆன நொபல் ரிசோர்சஸ் இன்டர்நெஷனல் பிரைவட் கம்பனி – வியாபாரக் கடன்கொடுத்தோர் என்பவற்றை மெய்மையாய்வு செய்வதற்குத் தேவையான மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் ஏனைய சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

CSCL இற்கான ரூபா 66,307,336 பழைய செலுத்த வேண்டியவை

------------------------------------

பழைய காப்புறுதிக்காகப் கிடைக்க வேண்டிய இழப்பீட்டுற்குரிய ரூபா 33,959,892 மற்றும் சுங்கத்திற்கு மேலதிகமாகச் செலுத்திய ரூபா 26,506,919 என்பன CSCL இற்குச் செலுத்த வேண்டிய தொகையாக காட்டப்பட்டுள்ளது. இந்த இரண்டு தொகைகளிற்குமான பொறுப்பு CSCL இற்கே காணப்படுகின்றது.

CSCL இற்கான பழைய காப்புறுதி ரூபா 33,959,892

------------------------------------

இந்தக் காப்புறுதிக் கிரயத்தை உறிஞ்சுவதற்காக ஊளுஊ இற்காக குறித்துக் கொள்ளப்பட்டதுடன் ஊளுஊ பணிப்பாளர் தீர்ப்பதற்கு கவனம் செலுத்தியுள்ளார். இது கப்பலேற்றல் இல. 79 மற்றும் 154 இற்குரியனவாகும். இதற்கான கூட்டக்குறிப்பு கிடைக்கக் கூடியதாக உள்ளது.

நானாவிதக் கடன்பட்டோர் - ரூபா 18,075,801

------------------------------------

சுங்கத்திற்கு மேலதிகமாகச் செலுத்திய தொகையில் இது உள்ளடங்கியுள்ளமை ஆரம்ப புலனாய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது. இது மேலும் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

இ.மி.ச. இடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 4,677,508

------------------------------------

2017 இல் இ.மி.ச. இன் கணக்கைத் தீர்த்த பின்னர் எஞ்சிய தொகையினை இது காட்டுகின்றது. மூலத்தினை மதிப்பிடுவதற்காக புலனாய்வு செய்யப்பட்டு வருகின்றது.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உளதாந்தன்மை யினை உறுதிப்படுத்து வதற்காக கணக்கா ய்விற்கு சான்றுகள் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| | இ.மி.ச. ஏனைய பெறவேண்டியவை ரூபா 1,760,500<br>------------------------------------<br>2017 இல் இ.மி.ச. இன் கணக்கைத் தீர்த்த பின்னர் எஞ்சிய தொகையினை இது காட்டுகின்றது. மூலத்தினை மதிப்பிடுவதற்காக புலனாய்வு செய்யப்பட்டு வருகின்றது.<br>வியாபாரக் கடன்கொடுத்தோர் - நொபல் ரூபா 85,887,776<br>------------------------------------<br>நாணயக் கடிதத்தின் காலம் முடிவடைந்தமையால் நொபல் ரிசோர்சஸ் இன்டர்நெஷனல் பிரைவட் லிமிடட் இனால் எடுக்கப்பட்ட தொகையின் ஒரு பகுதியாகும். | |
| (ஆ)ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிறைவேட்) லிமிட்டட் இன் நிதிக்கூற்றுக்கள் மீது பின்வரும் விடயங்கள் உள்ளடங்கலாக பிரதானமாக இலங்கை கணக்கீட்டு நியமங்க ளுடன் இணங்கி ஒழுகியிருக்கா மையின் காரணமாக என்னால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டிருந்தது. | | |
| i. பறக்கும் சாம்பல் மற்றும் கீழ் சகதியை (fly ash and bottom sludge) பயன்படுத்தி சீமெந்து அடிப்படையிலான உற்பத்திப்பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கான தொழிற்சாலையொன்றை நிர்மாணிப்பதற்காக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்ட்ராட் ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட் உடனான கூட்டுத்தொழில் முயற்சியொன்றில் கம்பனி ரூபா 7,364,447 இனை முதலீடு செய்திருந்ததுடன் கூட்டுத்தொழில் முயற்சி உடன்படிக்கை முடிவிற்குக் கொண்டுவரப்பட்டு வணிகப் பங்காளரொருவர் கிடைக்காமை காரணமாக சொத்துக்கள் பயன்பாடற்றுக் | ரூபா 7.3 மில்லியன் பெறுமதியான இந்த சாம்பல் கல் செயற்திட்டம் நீண்டகாலமாக நிலுவையிலுள்ள விடயமாக இருப்பதனால் பொருத்தமான விலைமதிப்பீடொன்றை மேற்கொண்ட பின்னர் இந்தக் காணி மற்றும் கட்டிடங்களை கையேற்பதற்காக இ.மி.ச. இற்கு கடிதமொன்றை எழுதுவதற்கு எஸ்எல்ஈ இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது. அந்த ஆலோசனைக்கமைய, விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ரூபா 2.6 மில்லியன் பெறுமதியிடப்பட்டு அத்திணைக்களத்திலிருந்து 2019 மே 31 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த | இந்தச் செயற்திட்டத் தில் மேற்கொள்ளப் பட்ட முதலீடு தொடர் பாக குழுமம் நட்ட ஏற்பாடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டன. கம்பனியின் பணிப்பாளர் சபை, இலங்கை மின்சார சபைக்குச் சொத்துக்களைக் கையளிப்பதற்குத் தீர்மானித்து இவ்விடயம் தொடர்பில் பொது முகாமையாளருடன் 2016 நவம்பர் 10 ஆந் திகதி கலந்துரையாடியிருந்த போதிலும், 2019 யூலை 15 ஆந் திகதி வரையிலும் இலங்கை மின்சார சபையால் சொத்துக்கள் கையேற்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், இது தொடர்பில் ஏற்பட்ட கிரயங்களை அறவிடுதல் மீதான போதியளவு பொருத்தமான சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அத்துடன், மேற்படி செயற்திட்டம் மீது குழுமம் எந்தவொரு நட்டக்கடன் ஏற்பாட்டையும் செய்திருக்கவில்லை. | காலக்கழிவு நட்டம் இவ்வாண்டில் சீராக்கப்படும். | |
| ii. | வங்கிக் கூற்றின் படி, மீளாய்வாண்டிற்கான காலக்கடன் வட்டி மற்றும் தண்டக் கட்டணங்கள் ரூபா 14,410,173 ஆகக் காணப்பட்டது. இருப்பினும், ரூபா 12,960,397 தொகை மாத்திரமே காலக்கடன் வட்டி மற்றும் தண்டக் கட்டணங்களாக சாட்டப்பட்டிருந்தது. அதன்விளைவாக, மீளாய்வாண்டிற் கான இலாபம் ரூபா 1,449,776 தொகையால் அதிகரித்துக் காட்டப் பட்டிருந்தது. | மொத்த நிதிக் கிரயமான ரூபா 15,744,485 இல் ரூபா 12,836,150 தொகை கடன்களிற்கான வட்டியாகும். எஞ்சிய தொகை வங்கிக் கட்டணங்கள், குத்தகை வட்டி மற்றும் நாணயமாற்று நட்டமாகும். | வங்கிக் கூற்றிலுள்ள விபரங்களின் பிரகாரம் பதிவேடுகள் வைத்தி ருத்தல் வேண்டும். |
| iii. | கம்பனியின் பதவியணியினர் அதன் துணைக் கம்பனிகளின் நிர்வாகச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்திருந் ததுடன் மீளாய்வாண்டில் அது தொடர்பில் ஏற்பட்டிருந்த ரூபா 21,556,883 தொகை மீள்நிரப்பல் செய்யப்படாது கம்பனியின் பதவி யணியினரது நிர்வாகச் செலவின மாகக் கருதப்பட்டிருந்தது. | ஆண்டின் போது துணைக் கம்பனிகள் போதியளவு மிகையினை உருவாக்கியிருக்கா மையால் முகாமைத்துவக் கட்டணங்களை சாட்டுவதற்கான தத்துவம் செயற்படுத்தப்பட வில்லை. எஸ்எல்ஈ 2019 முதல் இந்த எண்ணக்கருவினை பிரயோகிக்கும். | துணைக் கம்பனிகள் சார்பாக கம்பனி மேற் கொண்ட செலவினம் மீள்நிரப்பப் படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| iv. பிற்போட்ட வரிச் சொத்துக்கள், நிலையான வைப்புக்கள், வருமான வரி ஏற்பாடு மற்றும் ஓய்வூதிய நலப் பொறுப்பிற்காக நிதிக்கூற்று க்களில் குறிப்புக்கள் வழங்கப்பட்டி ருக்கவில்லை. | முன்னைய பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தினை அடிப்படை யாகக் கொண்டு எஸ்எல்ஈ இன் வருமான வரி மற்றும் பிற்போட்ட வரிக்கான கணிப்பீடுகள் சுயாதீன கணக்காய்வாளர் நிறுவனமொன்றிற்கு கையளிக்கப்பட்டது. காலம் போதாமை காரணமாக குறித்த சுயாதீன கணக்காய்வுக் கணிப்பீடுகள் கிடைப்பதற்கு முன்னரே 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பூரணப்படுத்தப் பட்டன. நிதிக்கூற்றுக்களை பூரணப்படுத்துகையில் ஒரு ஏற்பாடாக மாத்திரமே ரூபா 875,214 மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது மேற்சொல் லப்பட்ட சுயாதீனக் கணிப்பீடுகள் கிடைத்துள் ளதுடன் அதனை முடிவாக்கும் செயற்பாட்டில் எஸ்எல்ஈ ஈடுபட்டுள்ளது. | பாவனையாளர்கள் நிதிக்கூற்றுக்களை விளங்கிக் கொள்வ தற்காக பிற்போட்ட வரிச் சொத்துக்கள், நிலையான வைப்பு க்கள், வருமான வரி ஏற்பாடு மற்றும் ஓய்வூ திய நலப் பொறுப்பிற் காக நிதிக்கூற்றுக் களில் குறிப்புக்கள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். |
| v. முறையே ரூபா 704,076, ரூபா 797,264, ரூபா 1,193,739, ரூபா 466,223 மற்றும் ரூபா 4,312,917 தொகையான ஏனைய பெறவேண்டி யவை, முற்பணமும், முற்கொடுப்பன வுகளும், அட்டுறு செலவினம், ஓய்வூதிய நலக் கடப்பாடு மற்றும் குத்தகைக் கடன்கொடுத்தோர் ஆகியவற்றிற்காக கம்பனி போதிய ளவு பொருத்தமான சான்றுகளை சமர்ப்பித்திருக்கவில்லை. ஆகை யால், அந்த மீதிகளின் சரியான தன்மையினை கணக்காய்வில் மெய்மையாய்வு செய்ய முடிந்தி ருக்கவில்லை. | வரைபு கணக்காய்வு அறிக்கைக்கு பதலளிக்கையில் இந்த மீதிகளிற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த கிடைக்க வேண்டிய வட்டி நீண்டகாலத்திற்கு முந்தியதாக காணப்படுவதனால் அது பதிவழிக்கப்படுதல் வேண்டும். எனவே அதற்கான பணிப்பாளர் சபை ஒப்புதலை எஸ்எல்ஈ கோரியுள்ளது. | முனைப்பழியுள்ள அபி ப்பிராயத்தைத் தவிர் த்துக் கொள்வதற் காக கம்பனி கணக் காய்வாளருக்கு ஏனைய பெறவேண்டி யவை, முற்பணம், முற்கொடுப்பனவுகள், அட்டுறு செலவினம், ஓய்வூதிய நலக் கடப் பாடு மற்றும் குத்த கைக் கடன்கொடுத் தோர் ஆகியன தொட ர்பில் போதியளவு பொருத்தமான சான்று களை சமர்ப்பித்தல் வேண்டும். |

### 1.5.2 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலுக் கம்பனியின் (ரீபிசீஎல்) கணக்காய்வாளர், நிதிக்கூற்று க்கள் மீது பின்வரும் கருத்திலெடுக்க வேண்டிய விடயங்களை சுட்டிக் காண்பித்திருந்தார். | | |
| சம்பூரில் 500 மெகா வாற்ஸ் நிலக்கரி மின்வலுப் பொறியை அபிவிருத்தி செய்யும் ஒரே நோக்கில் செயற்பட்ட கம்பனி, அதன் மின்வலுப் பொறியின் அபிவிருத்தி நடவடிக்கைகளை கைவிட்டி ருந்ததுடன் முன்னர் மூலதனமாக்கப்பட்ட செலவினங்கள் மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தன. அதற்குப் பதிலாக, சம்பூரில் நிலக்கரி மின்வலுப் பொறியை நிர்மாணிப்பதற்காக வழங்கப் பட்ட அதே காணியில் ரீபிசீஎல் ஆல் 50 மெகா வாற்ஸ் சூரிய மின்வலுப் பொறியை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. மேலும் கரவலப்பிட்டியவில் 500 மெகா வாற்ஸ் எல்என்ஜீ மின்வலுப் பொறியை அபிவிருத்தி செய்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், மேற்படி மின்வலுப் பொறிகளின் அபிவிருத்திச் செயற்பாடுக ளில் எவ்வித முன்னேற்றமும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. அதற்கிணங்க, தொடர்ந்தியங்கும் எண்ண க்கருவொன்றாக தொடர்ந்து செயற்படு வதற்கான கம்பனிக்குள்ள ஆற்றல் | உத்தேசிக்கப்பட்டுள்ள சாம்பூர் நிலக்கரி மின்வலுச் செயற்திட்ட இடத்தில் 50 MW சூரிய சக்தி மின்வலுச் செயற்திட்டத்தினையும் இலங்கையின் மேற்குக் கரையோரத்தில் 500 MW எல்என்ஜீ மின்வலுச் செயற்திட்டத்தினையும் அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. முதலீட்டுச் சபையுடன் கலந்தலோசித்து, 500 MW எல்என்ஜீ மின்வலுச் செயற்திட்டத்தினைக் கையேற்பதற்கு மின்வலு, எரிசக்தி மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் பணிப்புரை வழங்கப்பட்டிருந்தது. எல்என்ஜீ செயற்திட்டத்திற்கான கூட்டுத்தொழில் முயற்சி உடன்படிக்கை (JVSHA) 2019.10.05 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது. சூரிய ஒளி மின்சாரச் செயற்திட்டத்திற்காக JVSHA இனைத் தயாரிப்பதன் மூலம் மேற்படி JVSHA இற்கு அவசியான திருத்தங்களை மேற்கொள்வதற்கு இ.மி.ச., NTPC மற்றும் TPCL இன் பணிப்பாளர் சபை முன்னர் தீர்மானித்திருந்தன. கூட்டுத் தொழில்முயற்சிப் பங்காளிகள் (இலங்கை மின்சார சபை மற்றும் இந்தியாவின் என்டிபிசி லிமிடட்) 2019.12.31 இற்கு முன்னர் சூரிய மின்வலுச் செயற்திட்டத்திற்கான JVSHA இல் கைச்சாத்திடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என | மின்வலு மற்றும் அவசர மின்வலுக் கொள்வனவுக் குறைபாடுகளை இழிவு படுத்துவதற்காக புதிய பிரேரணைகளை அமுல் படுத்துவதற்கு தேவை யான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்ற மையை இது சுட்டிக்காட்டுகின்றது. | எதிர்பார்க்கப்படுகின்றது.<br>JVSHA இல் கைச்சாத்திடுள்ளமையால் சூரிய மின்சாரச் செயற்திட்டச் செயற்பாடுகளின் ஆரம்பகட்ட அபிவிருத்திக்கான நிதியினை இடுதல் வேண்டுமென 2019..06.28 ஆந் திகதி இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. |

### 1.5.3 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| தொடர்புடைய உரிய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ)எல்கேஏஎஸ் 2 - இருப்புக்கள் மற்றும் எல்கேஏஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்** | | |
| சீஈபீயானது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட ஊழியர், மூலப்பொருள் மற்றும் மேந்தலைக் கிரயங்களை பெறுமதியிடுவதற்காக மேற்படி நியமங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உண்மைக் கிரயங்களை பிரயோகிப்பதற்குப் பதிலாக நியமக் கிரய முறையை பிரயோகிக்கின்றது. இதன் விளைவாக, அவற்றின் மீது ஏற்பட்ட ரூபா 5,532,199,136 கூட்டுத் தொகையான சாதகமான மூலப் பொருள் விலை முரணும் ஊழியர் மற்றும் மேந்தலை விகித முரண்களும் ரூபா 1,356,322,497 தொகையான சாதகமற்ற களஞ்சிய விலை முரணும் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப் பட்டிருந்தன. இதன் விளைவாக, சீஈபீயின் செயற்பாட்டு விளைவுகள், சொத்துக் கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம் | முடிவுறா வேலையிலிருந்து மாற்றப்படுகின்ற விநியோகப் பிரிவின் சொத்துக்கள் தவிர்ந்த ஏனைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் (காணி, கட்டிடங்கள், மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்) LKAS இலுள்ள பரிந்துரைகளிற்கு அமைவாக உள்ளபடியான கிரயத்தில் பெறுமதியிடப்படுகின்றன.<br><br>**LKAS** 02 – ‘‘இருப்புக்களின் கிரயத்தை அளவிடுவதற்கான நுட்பங்கள் - விளைவானது ஏறத்தாழ கிரயத்தை ஒத்திருக்குமாயின் வசதிக்கேற்ப **நியமக் கிரயம்** அல்லது சில்லறை முறை ஆகியவற்றில் **ஒன்றைப் பயன்படுத்தலாம்’’** இ.மி.ச. இனால் இருப்புக்களை மதிப்பிடுவ தற்காக நியமக் கிரய முறையினைப் பயன்படுத்துவதற்கான காரணம் யாதெனில், பொருள் விலை மாற்றத்திற்குட்பட்ட பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு வாடிக்கையா ளரிற்கும் நியமக் கிரய அடிப்படையொன்று காணப்படுதல் வேண்டும் என்பதற்கேயாகும். அத்துடன், | இருப்பினை பெறுமதி யிடுகையில் உள்ளபடி யான கிரயம் அல்லது அண்ணளவான கிரய அடிப்படையினை பிரயோ கித்தல் வேண்டும். |

என்பன மூலதன வேலைகள் தொடர்பில் உயர் நிதிசார் ஈடுபடுத்தல் காரணமாக குறிப்பிடத்தக் களவு பாதிக்கப்பட்டிருந்தன. எனினும் அவ் மூலதன வேலைகள் தொடர்பில் தேவையான தகவல்கள் காணப்படா ததன் காரணமாக அது தொடர்பான நிதிக்கூற்றுக்களிற்கான தாக்கத்தை கணக்காய்வின் போது மதிப்பிட முடியாதிருந்தது.

வரிசை நிர்மாணங்கள் மற்றும் ஏனைய வணிக நடவடிக்கைகளிற்காக பாரியளவில் இருப்பு விடயங்களை பயன்படுத்துகையில் அவற்றின் உள்ளபடி யான கிரயத்தைக் கண்டறிதல் நடைமுறைச் சாத்தியமற்றதாகும். ஊழிய வீதமானது உள்ளபடியான சராசரி நேர் ஊழியக் கிரயத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டு அது மூலதன மற்றும் பேணுகை தொழில்களிற்கு உரிஞ்சப்படுகின்றது. மேந்தலை வீதமானது குறித்த மூலதன மற்றும் பேணுகைத் தொழில்கள் தொடர்பில் நேரடியாகப் பகிரத்தக்க மேந்தலையினைப் பயன்படுத்தி கணிப்பிடப்படுகின்றது.

ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரரும் செயற் பாட்டுப் பிரதேசங்களில் மின்சார சேவை வசதியினை வழங்குவதற்காக பயன்படுத்து கின்ற அனைத்துப் பொருட்களிற்கும் நியம விலைகளை கணிப்பிடுதல் வேண்டுமென பாவனையாளர் பயன்பாட்டு ஆணைக்குழு வின் “கட்டண முறை” வழிகாட்டல்களில் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு கணிப்பிடப்பட்ட நியம விலைகள் சனவரி 01 இல் ஆரம்பித்து திசெம்பர் 31 இல் முடிவடைகின்ற ஒரு ஆண்டிற்கு மாத்திரம் செல்லுபடியாகின்றது.

விநியோகப் பிரிவுகளில் அதிக எண்ணிக்கை கொண்ட மூலதன தொழில்களும் பேணுகை தொழில்களும் காணப்படுவதன் காரணமாக அவ்வாறான தொழில்களுடன் தொடர்புடைய விலை முரண்களை அறிவதற்கு தற்போதைய முறைமை உதவுவதில்லை. முன்மொழியப்பட்டுள்ள ஈஆர்பி முறைமைக் கான ஆய்வுச் செயன்முறையின் போது இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டு கலந்துரை யாடப்பட்டது. எதிர்காலத்தில் ஈஆர்பி முறைமை அமுலாக்கப்பட்ட பின்னர் இப் பிரச்சினைக்கு தீர்வை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இருப்பினை பெறுமதியிடுவதற்கு மிகப் பொருத்தமான முறையினை ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு, "நிறையளித்த சராசரி விலையிடல் முறை" இனைப் பிரயோகிப்பதனை பரிந்துரை செய்திருந்தது. அதேவேளை, நிறையளித்த சராசரி விலையிடல் முறையினை இணைத்து ஈஆர்பி முறைமையினை அமுல்படுத்தும் செயன்முறையில் இ.மி.ச. ஈடுபட்டுள்ளது. இ.மி.ச. இல் ஈஆர்பி முறைமை அறிமுகம் செய்யப்படுகையில் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும்.

மேலும், ஈஆர்பி முறைமை அமுல்படுத்தப்படும் வரை, உள்ளபடியான விலைக்கும் நியம விலைக்கும் இடையி லுள்ள வேறுபாட்டை இழிவுபடுத்துவதற்காக இரண்டு ஆண்டுகளிற்கு ஒரு முறை நியம விலையினை மீளாய்வு செய்யுமாறு குழு பரிந்துரை செய்திருந்தது.

2019 ஆம் ஆண்டு முதல் அமுலுக்குவரும் விதத்தில் விநியோகப் பிரிவு 04 இன் நிதிக்கூற்றுக்களிலிருந்து ஊழிய வீத முரணை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனை ஏனைய மூன்று பிரிவுகளிலும் அமுல்படுத்துவதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

**(ஆ) எல்கேஏஎஸ் 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலுள்ள மாற்றங்கள் மற்றும் தவறுகள்**

| | | |
|---|---|---|
| (i) சீஈபீயின் பணிப்பாளர் சபையால் முறையான நிறுவனரீதியான கொள் கைத் தீர்மானமொன்று எடுக்கப்படாமல் மேலதிக பொது முகாமையாளரால் (உற்பத்தி) வழங்கப்பட்ட அறிவுறுத்த லின் பிரகாரம் | 2019.01.01 முதல் அமுலுக்குவரும் வகையில் "பிறப்பாக்கல் பிரிவின் உதிரிப்பாகங்கள் - மூலதனச் செலவினம் மற்றும் செயற்பாட்டுச் செலவினத்தை கண்டறிதல்" தொடர்பில் 2018.09.17 ஆந் திகதிய GHQ/AGM(G)/Circular/2018/01 | GHQ/AGM(G)/Circular /2018/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகா ரம் கொடுக்கல் வாங்கல் கள் பதிவுசெய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 302,590,349 மற்றும் ரூபா 2,375,852,430 பெறுமதியான உதிரிப் பாகங்கள் முறையே செயற்பாட்டு செலவினங்கள் மற்றும் மூலதனச் செலவினங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. ஆகை யால், அத்தகைய வகைப்படுத்த லிற்காக பிரயோகிக்கப்பட்ட அடிப்படை யின் நியாயத்தன்மையினை கணக்காய் வில் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மேலும், வகைப்படுத்தலிற்காக பிரயோ கிக்கப்பட்ட அடிப்படையும் நிதிக்கூற்றுக் களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க--வில்லை. | ஆம் இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. 2019.01.1 முதல் சுற்றறிக்கையுடன் இணங்கி கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்வ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| **(ii)** சீஈபீ ஆல் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்ற முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிடப் பட்டவாறு மீளாய்வு செய்யப்பட்டி ருக்கவில்லை. உதாரணச் சந்தர்ப்ப மொன்றாக, முறையே ரூபா 32,241,176,427 கிரயமான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட நான்கு மின்வலு நிலையங்கள் மற்றும் ரூபா 1,848,341,889 கிரயமான 1,116 மோட்டார் வாகனங்கள் என்பன அவற்றின் உள்ளபடியான ஆயுட்காலம் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் தற்போதும் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. | பிறப்பாக்கல் பிரிவினது மின் பொறிகள் போன்ற நடைமுறையல்லாச் சொத்துக்கள், பண்பின் பிரகாரம் தனித்துவமானதாகவும் சிக்கலானதாகவும் காணப்படுவதுடன் அச்சொத்துக்களின் பயன்படு ஆயுட் காலத்தினையும் விலைமதிப்பினையும் மேற்கொள்வதற்கு குறித்த நிறுவனமொன்று/ வழிகாட்டல்கள் இல்லாதுள்ளன. ஆகையால் இது தொடர்பில் மேலதிக ஆய்வு நடாத்தப்படும்.<br><br>**முழுமையாகத் தேய்விடப்பட்ட மோட்டார் வாகனங்கள் மீளவிலைமதிக்காது பயன்படுத்தப்படுகின்றமை**<br>கொள்கையினை ஆய்வுசெய்து செயன் முறையொன்றை உருவாக்குவதற்காக குழுவொன்றுறை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சீஈபீயால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்ற முழுமையாக பெறுமானத்தேய்விடப்ப ட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் கணக்கீட் டுக் கொள்கைகளில் குறிப்பிடப்பட்டவாறு மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். |

**(இ)LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| | | |
|---|---|---|
| பரிமாற்றல் பிரிவிலுள்ள ரூபா 170,908,049,775 தொகையான நிலை யான சொத்துக்கள் மீளாய்வாண்டில் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | பரிமாற்றல் பிரிவிலுள்ள நிலையான சொத்துக்களை பௌதீக ரீதியில் மெய்மையாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | **LKAS 16** இன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பௌதீக ரீதியாக மெய் மையாய்வு செய்யப்ப டுதல் வேண்டும். |

**(ஈ) எல்கேஏஎஸ் 27 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்**

| | | |
|---|---|---|
| சபையின் ஊழியர் சேமலாப நிதியத்தால் (ஈபிஎவ்) நிதிக் கருவிகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 2,312,756,993 இன் அறவீட் டுத்தன்மை அந் நிதிக் கருவிகள் காணப்படாததன் காரணமாக ஐயத்திற்கிடமாக உள்ளது. ஊழியர் சேமலாப நிதியத்தின் பாதுகாவ லராக சீஈபீ உள்ளதால் நிகழத்தக்கவற்றிற்கான (ஏதாவது இருந்தால்) இறுதிப் பொறுப்பு சபைக்குரியதாக காணப்படுகின்றது. எனினும் இவ் நிகழத்தக்கவை தொடர்பாக சபையின் நிதிக்கூற்று க்களில் எந்தவொரு ஏற்பாடோ அல்லது வெளிப்படுத்தலோ மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அறிக்கையிடல் நிறுவக எண்ணக்கருச் சட்டகத்தின் 3.10 ஆம் பந்தியின் பிரகாரம், அறிக்கையிடல் நிறுவகமென்பது நிதிக்கூற் றுக்களைத் தயாரிப்பதற்காக வேண்டப்படு கின்ற அல்லது தெரிவுசெய்யப்படுகின்ற நிறுவகமாகும். அதற்கமைய, இ.மி.ச. இன் சேமலாப நிதியமானது சேமலாப நிதிய விதிகளின் (வர்த்தமானி அறிவித்தல் இல. 1321/18 – 2003 -12-31) பிரகாரம் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற தனிப்பட்ட நிறுவகமாகும். சேமலாப நிதியத்தின் விதிகள், தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்குமாறு நிதியத்தை வேண்டுகின்றது.<br><br>மேலும், சேமலாப நிதிய விதிகளின் 21(ii) ஆவது நிபந்தனையின் பிரகாரம், ‘‘சபையின் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் குழு நிதியத்தின் கணக்குகளைத் தயாரித்து அவற்றை சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு நிதியத்தின் கணக்குளைத் தயாரிக்கையில், நிதியத்தின் கணக்காய்வாளரது அறிவுரையின் பிரகாரம், குழு அது பொருத்தமெனக் கருதும் அவ்வாறான ஒதுக்கங்களை உருவாக்கலாம் என்பதுடன் ஏறட்பாடுகளையும் மேற்கொள்ளலாம். | இந்த நிகழத்தக்கவை தொடர்பாக சபையின் நிதிக்கூற்றுக்களில் ஏற் பாடோ அல்லது வெளிப் படுத்தலோ மேற்கொள் ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஆகையால், நிகழத்தக்கவைகளிற்கான (ஏதுமிருப்பின்) இறுதிப் பொறுப்பு நிதியத்திடமே காணப்படுகின்றது. அதற்க மைய, நிகழத்தக்கவை தொடர்பான தேவைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள் ளப்பட்டுள்ளன. | |
| **(உ)LKAS 38 – அருவச் சொத்துக்கள்**<br>நியமத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம் ரூபா 56,281,125 செலவில் கொள்வனவு செய்யப்பட்டு அபிவி ருத்தி செய்யப்பட்ட மென்பொதி அருவச் சொத்தாக இனங்காணப்பட்டு கணக்கீட்டுக் கொள்கைகளில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | நியமத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அருவச் சொத்துக்களைப் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள் ளப்படும். | கொள்வனவு செய்யப் பட்டு அபிவிருத்தி செய்ய ப்பட்ட மென்பொதி அரு வச் சொத்தாக இனங் காணப்பட்டு கணக்கீட்டுக் கொள்கைகளில் தேவை யான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)சீஈபீயின் ஓய்வூதிய நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 403,717,966 தொகையான முதலீடு மற்றும் அதன் மீதான ரூபா 16,045,328 தொகையான வட்டியின் அறவீட்டுத்தன்மை யானது அந்நிதிக்கருவிகள் காணப்படாததன் காரணமாக சந்தேகத்திற்கிடமாக உள்ளது. எனினும் இது தொடர்பில் சீராக்கங்களோ அல்லது ஏற்பாடுகளோ நிதிக்கூற்றுக் களில் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | முகப்பெறுமதி மற்றும் அதில் நிலுவையாகவுள்ள கூப்பன் வட்டிக் கொடுப்பனவுகளை மீட்டெடுப்பத ற்காக வழக்கு இல. DMR/1029/2018 இன் கீழ் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் என்ட்ரஸ்ட் செக்யுரிடீஸ் பீஎல்சீ இற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு விவாதத்திற்கு எடுக்கப்பட்டுள்ளதுடன் அடுத்த விசாரணைத் திகதி 2019 ஒக்தோபர் 01 ஆகும்.<br><br>மேலும், இலங்கை மத்திய வங்கியுடன் (சீபீஎஸ்எல்) ஒரு தீர்வுத் திட்டம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு வருகின்றது. இதில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகையில் 50 சதவீதத்தை நிலுவையாகவுள்ள கூப்பன் கொடுப்பனவுகளுடன் திருப்பிச் செலுத்தவும் | இது தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மீதமாகவுள்ள நிலுவைத் தொகையை நான்கு (04) சம தவணைகளில் தீர்க்கவும் இலங்கை மத்திய வங்கி முன்மொழிந்தது. ஆந்த முன்மொழிவுக்கு பதிலளிக்கும் விதமாக சீபீஈ இன் தலைவர் திரு. டபிள்யூ கனேகல 2017 அக்தோபர் 04 ஆந் திகதியிட்ட தனது கடிதத்தின் மூலம் மொத்த முதலீட்டின் செலுத்தப்படாதுள்ள பெறுமதியை மீட்டெடுப்பதற்காக என்ட்ரஸ்ட் செக்யுரிடீஸ் பீஎல்சீ இற்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையினையும் மேற்கொள்ள சீஈபீ இன் உரிமைக்கு எந்தவொரு பாரபட்சமும் இல்லாமல் அந்த முன்மொழிவிற்கு சீஈபீ இன் திரு.டபிள்யூ.பி. கனேகல ஒப்புதல் அளித்தார்.<br><br>அந்தக் கடிதத்தைத் தொடர்ந்து, மேற்கூறிய தீர்வுத் திட்டத்தின் தற்போதைய நிலையை விசாரிக்க பல நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஆந்தக் கடிதங்களிற்கு பதிலளிக்கும் வகையில் சீபீஎஸ்எல் முன்மொழிந்த தீர்வுத் திட்டத்தை ஒப்புதலுக்காக சீபீஎஸ்எல் இன் நாணயச் சபைக்கு பரிந்துரைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (ஆ)ரூபா 1,410,889,819 வரவு மீதி (இருப்பு பற்றாக்குறை) மற்றும் ரூபா 39,522,766 செலவு மீதி (இருப்பு மிகை) என்பன தீர்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருப்பு சீராக்கல் கணக்கில் காணப்பட்டது. | இருப்புச் சீராக்கல் கணக்கினை அகற்றுவதற்கு குறித்த பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. மோசடிகள், பற்றாக்குறைகளிற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலைமை பின்னிணைப்பு 01 இல் தரப்பட்டுள்ளது. | இருப்பு மிகை மற்றும் பற்றாக்குறையினை அது இடம்பெற்று குறுகிய காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ)அமைச்சரவையின் 10/2434/423 /034 ஆம் தீர்மானத்தின் பிரகாரம் லக்விஜயா மின்வலுப் பொறி நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 159,184,187,965 கடன் தொகைக்கான கடன் மற்றும் அதன் மீதான வட்டியை பொதுத் திறைசேரிக்கு சீஈபீ மீளச் | இலங்கை மின்சார சபையின் நிதிக்கூற்றுக்களிலுள்ள பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளின் பெறுபேறுகளைக் கருத்திற்கொண்டு லக்விஜயா மின்வலுப் பொறியின் மொத்தக் கடனையும் இலங்கை அரசாங்கத்தின் உரிமை மூலதனமாக மாற்றுவதற்கு 2018 யூலை 11 ஆந் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் பொதுத் திறைசேரியினால் தீர்மானம் | திறைசேரிச் செயற்பாடு கள் திணைக்களத்தி டமிருந்து எழுத்து மூலமான பணிப்புரை கிடைத்தவுடன் அல் லது நிலுவையான மீதிகளைச் செலுத்து வதற்காக சீஈபீ இன் புத்தகங்களைச் சீராக் குவதற்குத் தேவை யான நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| செலுத்த வேண்டும். எனினும் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் அக் கடனிற்கான வட்டியாக மீளாய்வாண்டின் போது ரூபா 3,281,749,986 தொகையையும் 2017 திசெம்பர் 31 வரை ரூபா 21,966,051,905 தொகையையும் கடனளிக்கும் வங்கிக்கு செலுத்தியிருந்த போதிலும் சீஈபீ அதன் கணக்குகளில் மேற்படி கொடுப்பனவுகளிற்காக செலுத்தியோ அல்லது ஏற்பாடுகளை மேற்கொண்டோ இருக்கவில்லை. ஆகையால் மீளாய்வாண்டிற்கான நட்டம் மற்றும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் என்பன முறையே ரூபா 3,281,749,986 மற்றும் ரூபா 25,247,801,891 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | எடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2018 ஆம் ஆண்டில் அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு பாதீட்டு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்காமை காரணமாக பொதுத் திறைசேரியினால் இதனை மேற்கொள்ள முடிந்திருக்கவில்லை. எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டில் சீனாவின் EXIM வங்கிக்கு பொதுத் திறைசேரியினால் செலுத்தப்பட்ட ரூபா 20,499,241,722.25 தொகையான மீளளிப்பினையும் வட்டியினையும் உரிமை மூலதனமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திடமிருந்து எழுத்துமூலமான பணிப்புரை கிடைத்த பின்னர் சீஈபீ இன் புத்தகங்களைச் சீராக்கவுவதற்கு சீஈபீ நடவடிக்கை எடுக்கும். | எடுத்தல் வேண்டும். |
| (ஈ) சீஈபீயால் பேணப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் சார்பில் சீஈபீ இனால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 41,421,524 தொகையான செலவினங்கள் பெறவேண்டி யவையாக கருதப்படாமல் சீஈபீயின் செலவினங்களாக கருதப்பட்டிருந்ததால் மீளாய் வாண்டிற்கான நட்டம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2003.12.31 ஆந் திகதிய 1321/18 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சீஈபீ இன் சேமலாப நிதியத்திற்கான 20(i) ஆம் விதியின் பிரகாரம் சபையால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பங்களைத் தவிர முதலீடுகளைக் கொள்வனவு செய்வதற்கும் நேரடியாகத் தொடர்புடைய செலவினங்கள் உட்பட சீஈபீ சேமலாப நிதியத்தின் நிர்வாக மற்றும் முகாமைத்துவச் செலவினம் சீஈபீ இன் செலவினமாக சாட்டப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.<br>ஊழியர் சேமலாப நிதியத்தின் ரூபா 41,421,524.00 செலவினத்தை சீஈபீ இன் நிதிக்கூற்றுக்களில் காண்பித்தல் மேலே கூறப்பட்ட | சீஈபீ ஊழியர் சேம லாப நிதியத்தின் விதி களை திருத்திய மைத்து நிதியத்தைப் பேணுவதற்காக சீஈபீ ஆல் மேற்கொள்ளப் பட்ட செலவினத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடி க்கை எடுத்தல் வேண் டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சீஈபீ இன் சேமலாப நிதியத்தின் விதிகளிற்கு அமைவாகவே உள்ளது. ஆகையால், சீஈபீ இன் நிதிக்கூற்றுக்களில் இச்செலவினம் பெறவேண்டியதாக காட்டப்படுவது அவசியமற்றதாகும். | |
| (உ) | 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசாங்க நிறுவனங்களின் மின் பிறப்பாக்கிகள், மின்தூக்கிகள் மற்றும் வளிப் பதனாக்கிகளின் வழங்கல், பராமரிப்பு மற்றும் திருத்தத்திற்காக சீஈபீயால் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அவற்றின் விலைச்சிட்டைப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்வதற் குப் பதிலாக கிரயத்தில் பெறுமதியிடப்பட்டு அதற்கிணங்க அவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறவேண்டியவைகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் என்பன ரூபா 66,987,761 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | சீஈ (மின்வலுப் பொறி), சீஈ (காற்றுச்சீராக்கி மற்றும் குளிரூட்டல்) மற்றும் சீஈ (பாரந்தூக்கி) ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த பேணுகைத் தொழில்கள் தொடர்பில் அரசாங்க நிறுவனங்களிற்கு பொறியியல் மதிப்பீடுகளைத் தயாரித்து வழங்குதல் வழமையாக பிரதிப் பொது முகாமையாளர் (டபிள்யுஏஎஸ்) இன் கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்திருந்ததுடன், இ.மி.ச. இன் பேணுகைத் தொழில்களிற்கான கொடுப்பனவுகளை செலுத்துவதில் அரசாங்க நிறுவனங்களின் அசமந்த போக்கு காரணமாக குறித்த அரசாங்க நிறுவனங்களிலிருந்து மதிப்பீட்டுத் தொகை அறவிடப்படும் வரை ஏற்பட்ட உண்மையான கிரயமே பதியப்பட்டது. அதன் விளைவாக, 2015 முதல் செய்யப்பட்ட வேலைகளிற்காக வாடிக்கையாளர்களிற்கு காலாண்டு அடிப்படையில் கிரயப் பட்டியல் வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டது.<br><br>இருப்பினும், 2005 முதல் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து நிலுவையாகவுள்ள இ.மி.ச. இற்கு ஏற்பட்ட கிரயத்தினையேனும் அறவிடுவதற்கு இயன்றளவு முயற்சிகள் எடுக்கப்பட்டன.<br><br>இறுதியாக, நிலுவைகளை அறவிடுவதற்கு அரசாங்க நிறுவனங்களிற்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கையினை எடுப்பதற்கு முடியாது என சட்டமா அதிபர் குறிப்பிட்டிருந்தமையால், இது தொடர்பில் 2017 ஆம் ஆண்டிற்கான முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் முழுமையான ஐயக்கடன் ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டது.<br>முன்னைய கொடுக்கல் | 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசாங்க நிறுவனங்களின் மின் பிறப்பாக்கிகள், மின் தூக்கிகள் மற்றும் வளிப் பதனாக்கிகளின் வழங்கல், பராமரிப்பு மற்றும் திருத்தத்திற்காக சீஈபீயால் மேற் கொள்ளப்பட்ட வேலைகள், கட்டாயமாக அவற்றின் விலைச் சிட்டைகளின் அடிப்படையில் பெறுமதியிடப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வாங்கல்கள் (2013 இன் முந்தியவை) கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்டுள்ளவாறு 2018 இன் நிதிக்கூற்றுக்களில் அவற்றின் கிரயத்திலன்றி பட்டியல் பெறுமதியில் பதிவுசெய்யப்படுகின்றமையின் விளைவாக நிதிக்கூற்றுக்களிற்கான தாக்கம் அதாவது 2013 இற்கு முன்னரான கொடுக்கல் வாங்கல்கள் திருத்தப்படுமாயின் ஒத்த தொகையினாலேயே 2018 இன் பெறவேண்டியவை மாறுபடும் என்பதனால் அது பொருண்மையற்றதாகவே காணப்படுகின்றது.<br><br>ஆகையால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நடைமுறைச் சொத்துக்களும் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களும் ரூபா 66,987,761 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன என்ற கூற்றுடன் உடன்பட முடியாதுள்ளது. | |
| (ஊ) | 2016 இல் பொதுத் திறைசேரி யினால் விதிக்கப்பட்ட தீர்வைக் காக செலுத்திய ரூபா 5 பில்லியன் தொகை உரிமைத்து வக் கூற்றில் காண்பிப்பதற்குப் பதிலாக ஏனைய கடன்பட் டோராக காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பில் இ.மி.ச. இன் பொது முகாமையாளர், பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கான பிரதியொன்றுடன் 2019.09.03 ஆந் திகதிய CEB/FM/GN/584 ஆம் இலக்க கடிதத்தினால் பணிப்பாளர் நாயத்திடமிருந்து (திறைசேரிச் செயற்பாடுகள்) விளக்கமளித்தலை கோரியிருந்தார். பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவரது 2019.10.16 ஆந் திகதிய PED/I/CEB/2/11/iii ஆம் இலக்க கடிதத்தினால், முகாமைத்துவக் கட்டணமாக ரூபா 5 பில்லியன் திறைசேரிக்குச் செலுத்தப்பட்டதாக கருதுமாறு பணிப்புரை வழங்கியிருந்தார். அதற்கமைய அத்தெகை கணக்குப் புத்தகங்களில் பதிவுசெய்யப்படுமென்பதுடன் 10 ஆண்டுகளில் பதிவழக்கப்படும். (பின்னணைப்பு 02) | 2016 இல் பொதுத் திறைசேரியினால் விதிக்கப்பட்ட தீர்வைக்காக செலுத்திய ரூபா 5 பில்லியன் தொகை உரிமைத்துவக் கூற்றில் காண்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (எ) ஆரம்ப விலைப்பட்டியலின் அடிப்படையில் நிலக்கரிக் கொள்வனவுகளைப் பதிவுசெய்திரு ந்தமை காரணமாக நிதிக்கூற்றுக்க ளிலுள்ள லங்கா கோல் கம்பனியிடமிருந்து பெறவேண்டிய மீதிக்கும் அக்கம்பனியால் செலுத் தவேண்டிய மீதிக்குமிடையே ரூபா 253,187,075 வேறுபாடு அவதானிக் கப்பட்டது. அதன் விளைவாக, ஆண்டிற்கான விற்பனைக் கிரயம் அத்தொகையால் குறைத்தும் ஆண்டிற்கான நட்டம் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன. | இந்த விடயம் 2016 இன் கணக்காய்வு ஐயவினாவினால் (POE/C/CEB/FA/2016) தொடுக்கப் பட்டிருந்ததுடன் LCC இனால் இறுதி வரிப் பட்டியல் வழங்கப்படும் வரை ஆரம்ப விலைப்பட்டியலிலுள்ள பெறுமதியை பயன்படுத்துவதற்கு இரு தரப்பும் (CEB/LCC) இணங்கியிருந்தன. ஆகையால், 2017.12.31 இல் உள்ளவாறான நிலுவைத் தொகை பூச்சியமாகும். ஆனால் 2018 இல் LCC இந்த வழிமுறையினை உள்ளபடியான பட்டியல் பெறுமதிக்கு மாற்றியமைத்திருந்தது. இந்த மாற்றமே வேறு பாட்டிற்கான காரணமாகும். | இரண்டு தரப்பினாலும் செலவினப் பட்டியல் விலையில் பதிவேடு கள் வைக்கப்பட்டு ஒத்த கணக்கீட்டுப் பரிகாரத்தைப் பிரயோ கித்தல் வேண்டும். |
| (ஏ) உப கடன் உடன்படிக்கை யிலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் பொதுத் திறைசேரிக் கான ரூபா 2,557,474,111 வட்டி செலுத்தப்பட்டோ அல்லது ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டோ இருக்காததுடன், மேற்படி வட்டியினை செலுத்துவதற்கு தாமதித்திருந்தமையால் ஆண் டொன்றிற்கு 1 சதவீதத்திற்கும் 2 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் மேலதிக வட்டியினை செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டிற்காக இலங்கை மின்சார சபைக்கும் பொதுத் திறைசேரிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டிருந்த உப கடன் உடன்படிக் கையிலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் செயற்திட்ட உப கடன்கள் மீது திறைசெரிக்குச் செலுத்தப்பட வேண்டிய வட்டிக்கான ஏற்பாடு, 2018 சனவரி 11 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய, இ.மி.ச. இனால் கணக்கீடு செய்யப்படவில்லை. 2015 மார்ச் 18 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் உரிமைத்துவத்திற்கு மாற்றாதிருந்த, 2014 திசெம்பர் 31 இற்குப் பின்னர் திறைசேரியின் ஊடாக இ.மி.ச. இற்கு வழங்கிய அனைத்து உப கடன்களையும் உரிமைத்துவமாக மாற்றுவதற்கு இத்தீர்மானத்தில் இணங்கப்பட்டது.<br><br>அதனைத் தொடர்ந்து, இந்த விடயம், 2019 ஒக்தோபர் 03 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினது தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு இ.மி.ச. இன் கணக்குப் புத்தகங்களிலுள்ள கடன் நிலுவையினை உரிமைத்துவத்திற்கு | உப கடன் உடன்படிக் கையிலுள்ள நிபந் தனைகளின் பிரகாரம் சீஈபீ பொதுத் திறை சேரிக்கான வட்டி யினை செலுத்துதல் அல்லது ஏற்பாட்டை மேற்கொள்தல் வேண் டும். |

| | | |
|---|---|---|
| | மாற்றி இதனைத் தீர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அரச கணக்குகள் திணைக்களத்திற்கு போதியளவு பாதீட்டு நிதிஏற்பாடு காணப்படாமையால் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனையினைப் பெற்று இக்கடனானது உரிமைத்துவத்திற்கு மாற்றப்படும். அத்துடன், மேற்படி கடன் மற்றும் புத்தளம் அனல்மின்சார ஆலைக்கான கடன் தவிர்ந்த ஏனைய கடன்களை இ.மி.ச. இற்கான மானியமாக கருதுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.<br><br>அதற்கமைய, புத்தளம் அனல்மின்சார ஆலைக்காக மீளளிக்கப்பட வேண்டிய ரூபா 20,499,241,722.25 கடனை இலங்கை அரசாங்கத்தின் 2019 இற்கான உரிமைத்துவதமாக பொதுத் திறைசேரி மாற்றியதுடன் இக்கடன் நிலுவைக்குரிய பதிவுகளை இ.மி.ச. இன் கணக்குப் புத்தகங்களில் மேற்கொள்ளுமாறு பொது முயற்சிகள் திணைக்களம் அறிவித்திருந்தது. (பின்னிணைப்பு 03) | |
| (ஐ) 2018 ஆம் ஆண்டிற்காக மொரகஹகந்த சிற்றளவு நீர்மின் சார செயற்திட்டத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மின்சாரத்திற்காக ரூபா 432,223,807 ஏற்பாடொன்றை இ.மி.ச. மேற்கொண்டிருக்க வில்லை. அதன்காரணமாக மீளாய்வாண்டிற்கான நட்டம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | குறித்துக் கொள்ளப்பட்டது. | கொடுக்கல் வாங்கல் களை பதிவுசெய்வ தற்கான உச்ச வரம் பினை இனங்காண்ப தற்கு உள்ளகக் கட்டு ப்பாடு அபிவிருத்தி செய்யப்படுதல் வேண் டும். |
| (ஒ) இரண்டு செயற்திட்டங்கள் தொடர்பில் வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் பதிவேடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் வழங் கப்பட்டிருந்த ரூபா 358,235,012 தொகை நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் கருத்திலெடுக் | வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் அறிக்கையின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டிற்கான நிதி வழங்கல் கணக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும், கணக்கீட்டு நோக்கத்திற்காக பெறப்பட்டிருந்த அறிக்கையில் இத்தொகை காணப்படாமையால் 2018 ஆம் ஆண்டின் கணக்குகளில் இது | உண்மையான முடி வுறா வேலையினை இனங்காண்பதற்காக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் அனைத்து நிதிப் பெறுவனவுகளும் கருத்திற் கொள்ளப்படு தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, முடிவுறாவேலையும் பொறுப்புக்களும் அத்தொகை யால் குறைத்துக் கூறப்பட்டி ருந்தன. | தவறவிடப்பட்டுள்ளது. இது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு 2019 ஆகஸ்ட் மாதத்தில் நிதிப்பெறுவனவாக பதியப்பட்டுள்ளது.<br><br>**தூய எரிசக்தி மற்றும் வலைப்பின்னல் வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டம் – ரூபா 12,800,693**<br><br>இச்செயற்திட்டமானது செயற்திட்டப் பிரிவு மற்றும் விநியோகப் பிரிவு 02 ஆகியவற்றால் கையாளப்படுகின்றது. செயற்திட்டப் பிரிவினது பதிவேடுகளின் அடிப்படையில், அனைத்து நிதிப்பெறுவனவுகளும் 2018 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. | |

## 1.5.5 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீஈபீயின் நிதிக் கூற்றுக்களில் இலங்கை பெற்றோ லியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டியதாக காட்டப் பட்ட ரூபா 46,029,135,981 தொகையான மீதிக்கும் அத் திகதியிலுள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டி யதாக காட்டப்பட்ட ரூபா 46,813,099,111 தொகையான நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 783,963,130 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.<br><br>இது தொடர்பில் சீஈபீயின் தலைவர் பின்வருமாறு கூறியி ருந்தார்.<br><br>***“2013 செப்தெம்பர் 30 இல் திறைசேரிச் செயலாளரால் நடாத்தப்பட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், 2013 ஏப்ரல் 20*** | இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சின் கணக்காய்வின் குழுவின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் கலந்தாலோசித்து சிக்கலைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

*இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் தாமதமான பற்றுச்சீட்டுப் பெறுமதியின் (கடன் காலத்திற்கு அப்பால்) மீதான வட்டியைச் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், ரூபா 753,610,829 தாமத வட்டிக் கொடுப்பனவு சீசுபீயால் 2013 ஏப்ரல் 20 இற்கு முன்னரான எரிபொருள் கொள்வனவுடன் தொடர்புபட்டிருந்தது. ஆகையால், இதற்கு சீசுபீ பொறுப்பில்லாததால் இந்த வேறுபாடு இணக்கம் செய்யப்பட வேண்டியதில்லை."*

எனினும், இது கணக்காய்வு அறிக்கைகளில் 2013 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 வரையிலும் அச் சிக்கல் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ)விலைப்பட்டியலிடல் முறைமை யிலும் அதே போல் நிதிக்கூற்றுக்களிலும் சில மீதிகள் தவற விடப்பட்டதன் காரணமாக விநி யோகப் பிரிவு 1, 2, 3 மற்றும் 4 இன் விலைப்பட்டியலிடல் முறை மையில் காட்டப்பட்ட 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளிற்கும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த தொகைக்கும் இடையில் ரூபா 36,888,821 கூட்டுமொத்தமான இணக்கம் செய்யப்படாத

சபையின் பட்டியலிடல் முறைமையில் பட்டியலிடல் கொடுக்கல் வாங்கலை பதிவுசெய்கின்ற செயன்முறையும் பொதுப் பேரேட்டில் நிதிக் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தலும் எந்தவொரு நேரத்திலும் இணங்குவதில்லை. அவ்வாறான வேறுபாடுகளிற்கான காரணத்தை நிச்சயிப்பதற்காக விநியோகப் பிரிவு கணக்கிணக்கமொன்றை மேற்கொள்கின்றது.

உயர் வழங்கல் கடன்பட்டோர் பேரேட்டு மீதி செயற்பாட்டுக் கடன்பட்டோரையும் இறுதியாக்கப்பட்ட கடன்பட்டோரையும் உள்ளடக்குகின்றது. இருப்பினும், ஐரீ கிளையிலிருந்து

பேரேட்ட மீதிகளை முறைமை மீதிகளுடன் கணக்கிணக்கம் செய்வத ற்காக ஒவ்வொரு மாதமும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | பிரித்தெடுக்கப்பட்ட பட்டியல் அறிக்கை செயற்பாட்டுக் கடன்பட்டோர் மீதியினை மாத்திரம் உள்ளடக்குகின்றது. ஆகையால், ஐரீ கிளையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பட்டியல் அறிக்கை மீதிக்கும் பேரேட்டு மீதிக்கும் இடையிலான வேறுபாட்டிற்கு பிரதான காரணம் இறுதியாக்கப்பட்ட கடன்பட்டோர் மீதியாகும். | |

**1.6 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல் விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்திய) சட்டத்தின் 43 ஆம் பிரிவின் 4 இ (ii) உப பிரிவிலுள்ள தேவைப்படுகளின் படி, கேள்வி கோரல் நடைமுறையினைப் பிரயோகிக்காது 2016 ஏப்ரல் முதல் 2018 திசெம்பர் வரையான காலப்பகுதியில் இ.மி.ச. (ரூபா 39,555 மில்லியன் பெறுமதியான 1,441 GWh) அவசர மின்வலுக் கொள்வனவினை செய்திருந் தது. | இந்தக் கொள்வனவிற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. | சுயாதீன மின்வலு உற்பத் தியாளர்களிடமிருந்து மின் சாரத்தைக் கொள்வனவு செய்கையில் கேள்வி கோரல் நடைமுறையினை பிரயோகித்தல் வேண்டும். |
| (ஆ)வழக்கு இல. CA/WRIT/193 /2015 இன் கீழ் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் 2014 நவம்பர் 27 ஆந் திகதிய 2014/GM/46/Pers ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி, இது சட்டவிரோதமானதும், ஏற்றுக்கொள்ள முடியாததும், தடுக்கப்பட வேண்டியதுமாகும். ஆகையால், இச்சுற்றறிக்கை மற்றும் இது தொடர்பில் வெளியிடப்பட்ட ஏனைய | ஐயவினாவினால் இக்கொடுப்பனவு 2015 – 2018 காலத்தில் செலுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள் ளதுடன், நீதிமன்ற தீர்ப்பானது 2019 ஏப்ரல் 02 ஆந் திகதியே வழங்கப்பட்டுள்ளது. தீர்ப்பு கிடைக்கப்பெற்ற பின்னர், 2019 ஏப்ரல் முதல் அமுலுக்குவரும் வகையில் குறித்த ஊழியர்களின் சம்பளத்தை இ.மி.ச. இடைநிறுத்தியுள்ளதுடன், சம்பளம் செலுத்துதல் தொடர்பாக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கும் வரை, குறித்த சம்பளத்திற்குப் பதிலாக மீள அறவிடும் அடிப்படையில் படியொன்று செலுத்தப்பட்டுள்ளது. | சீஈபீ நீதிமன்றத் தீர்மான ங்களை பின்பற்றுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சுற்றறிக்கைகளின் அடிப்படை யில் சம்பளம் செலுத்தப்படுதல் சட்டவிரோதமானதாகும். தெரிவுக் கணக்காய்வின் படி, சம்பள அதிகரிப்புகளின் அடிப்ப டையில் செலுத்திய படிகள், மேலதிகநேரக் கொடுப்பனவு கள், நாள் கொடுப்பனவு, உபகாரச்சம்பளம், உழைக்கும் போதே செலுத்தும் வரி, வரி மீதான வரி, ஊசேநி, ஊநநி, ஓய்வூதியக் கொடுப்பனவு, விடுமுறை காசாக்கல் மற்றும் கடன்கள் மீதான வட்டி என்பவற்றின் தாக்கத்தினைக் கருத்திற்கொள்ளாது 2015 – 2018 காலத்தில் ஏறத்தாழ ரூபா 833,453,051 மேலதிகக் கொடுப்பனவு காணப்பட்டது. இருப்பினும், சீஈபீ அமைச்சர வைத் தீர்மானத்தின் அடிப்படை யில் இந்த சட்டவிரோதமான சுற்றறிக்கையின் கீழ் அதனது சம்பளத்தை தொடர்ந்தும் செலுத்திவருகின்றது. | மேலும், குறித்த நீதிமன்ற தீர்ப்பு தொடர்பில் சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தினை இ.மி.ச. கோரியுள்ளதுடன், நீதிமன்ற தீர்ப்புக்கமைய செயற்படுவதற்கு மின்வலு, எரிசக்தி மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து இ.மி.ச. தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. | |
| (இ)2007 நவம்பர் 14 இல் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் 2009 மே 26 இன் 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையிலு ள்ள ஏற்பாடுகள் என்பவற் றிற்கு முரணாக சபையின் அங்கீகாரம் மீது சீஈபீயின் பதவியணியினரிற்கு காலத் திற்குக் காலம் பல்வேறு பதவியணியினர் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. 2018 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,873 மில்லியன் மற்றும் ரூபா 1,930 | சம்பளங்கள் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய இ.மி.சபையின் ஊழியர்களிற்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக 2008.04.09 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. இதன் கீழ் எந்த படிகள் கூறப்பட்டுள்ளன என்பது தெளிவாக காணப்படவில்லை என்பதனால் விரிவான பதிலை அளிக்க முடியாதுள்ளது. அத்துடன், இதனையொத்த கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஐயவினாவிற்கும் பதிலளிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையினால் சேர்த்துக்கொள்ளப்பட்டாலன்றி | பதவியணியினருக்கு படிக ளைச் செலுத்துகையில் சீஈபீ சுற்றறிக்கைத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மில்லியன் கூட்டு மொத்தமான அத்தகைய படிகள் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வு தெரிவுச் செவ் வைகளின் போது வெளிப்படுத் தப்பட்டிருந்தது. | பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைகள் இ.மி.ச. இனால் கருத்திற்கொள்ளப்படுவதில்லை. இருப்பினும், செலுத்தப்படுகின்ற ஒவ்வொரு படிக்கும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | |
| (ஈ)1998 மார்ச் 08 ஆம் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் முதல் 14 சதவீதம் வரையான வட்டி வீதத்தில் வாகனக் கடன்களை வழங்குவதற்குப் பதிலாக சீஈபீ 4.2 சதவீத வட்டி வீதத்தில் அத்தகைய கடன்களை வழங்கியிருந்தது. மேலும், சீஈபீ பல திரவ பிரச்சனைகளை எதிர்கொள்ளுகின்ற போதிலும் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி பதவியணியினர் கடன்கள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வாகனக் கடன்கள் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் சலுகை வட்டி வீதத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் இது தொடர்பில் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளை இ.மி.ச. கருத்திற்கொள்ளவில்லை. அவ்வாறான வெகுமதி வழங்கல் திட்டமொன்றின்றி, ஊழியர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையினை இ.மி.ச. இற்கு பேணுவதற்கு முடியாதுள்ளது. | பதவியணியினருக்கு கடன் களைச் செலுத்துகையில் சீஈபீ சுற்றறிக்கைத்தேவை ப்பாடுகளுடன் இணங்கி யொழுகுதல் வேண்டும் அல்லது ஏதேனும் முரண் பாடுகளிற்காக பொது முயற்சிகள் திணைக்க ளத்திடமிருந்து அங்கீகா ரத்தைப் பெற்றுக்கொள் தல் வேண்டும். |
| (ஈ)2003 திசெம்பர் 31 ஆந் திகதிய 1321/18 ஆம் இலக்க அதிவி சேட வர்த்தமானி அறிவித்த லின் கீழ் தாபிக்கப்பட்ட 18 ஆம் இலக்க விதியின் தேவைப்பாடுகளின் பிரகாரம் விதிகளை சட்டரீதியாக மாற்றி யமைக்காது சபை அதனது ஓய்வூதியக் கொடுப்பனவையும் நிதியத்திற்கான பங்களிப்பையும் அதிகரித்து ஓய்வுபெற்றோ ருக்கான மருத்துவப் படியி னையும் அமுல்படுத்தியிருந்தது. அதன்விளைவாக, சபையின் ஓய்வூதியப் பொறுப்பு ரூபா 2,939 மில்லியனால் அதிகரி த்திருந்தது. | 23.4 ஆம் விதியின் பிரகாரம், சீஈபீ இன் பதவியணியினருக்கு சம்பளம் அதிகரிக்கப்பட்ட வேளையில் அதற்கிணைவாக ஓய்வூதியம் பெறுவோருக்கான படியும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் அதிகரிக்கப்பட்டது. தொழில் ஆணையாளர் நாயகத்தின் இணக்கப்படாட்டுடன் அவரது 2009 பெப்ரவரி 18 ஆந் திகதிய கடிதத்திற்கமைய ஓய்வூதியப் பங்களிப்பு 7% இலிருந்து 8% சதவீதம் வரை 1% ஆல் அதிகரிக்கப்பட்டதுடன் அதனைத்தொடர்ந்து, சகல பிரிவுகளினதும் தலைவர்களிற்கு 2008/GM/21/FM ஆம் இலக்க 2008 நவம்பர் 11 ஆந் திகதிய பொது முகாமையாளரின் சுற்றறிக்கை மூலம் இது அறிவிக்கப்பட்டது. | சீஈபீ இற்காக மேலதிகக் கிரயத்தை தவிர்க்கும் பொருட்டு எந்தவொரு கொடுப்பனவினையும் மேற்கொள்ள முன்னர் நிதியத்திற்கான விதிக ளின் எந்தவொரு திருத்த த்தினையும் சீஈபீ சட்ட ரீதியாக்குதல் வேண்டும். |

ஓய்வூதிய நிதிய முகாமைத்துவக் குழுவினூடாக தொழில் ஆணையாளரினதும் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினதும் தேவையான அங்கீகாரத்தைப் பெற்று, தலைவரால் நியமிக்கப்பட்ட உப குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைக்கமைய ஓய்வூதிய நிதிய விதிகளின் 18 ஆம் விதித் திருத்தங்களின் படி மருத்துவத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான விதிகளை திருத்தியமைப்பதற்கு சீஈபீ இன் பணிப்பாளர் சபை அங்கீகாரமளித்திருந்தது.

சீஈபீ இன் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட விதிகள், வர்த்தமானியில் வெளியிடுவதற்காக 2014 செப்தெம்பர் 01 ஆந் திகதி அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. அது மீண்டும் இரண்டாவது தடவையாகவும் 2017 ஒக்தோபர் 16 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சின் செயலாளரினால் அனுப்பியிருந்த 2018 பெப்ரவரி 16 ஆந் திகதிய கடிதத்திற்கு அமைவாக, இந்த விடயம் தற்போதைய பணிப்பாளர் சபையின் அவதானிப்பிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, 2013 செப்தெம்பர் 11 மற்றும் 2013 ஒக்தோபர் 23 ஆந் திகதி இடம்பெற்ற அதன் கூட்டங்களில் சபையால் எடுக்கப்பட்ட தீர்மானங்களிற்கேற்ப ஓய்வூதிய நிதியத்தின் விதிகளை திருந்தியமைப்பதற்கான அதன் இணக்கப்பாட்டை சபை 2018 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வழங்கியிருந்தது. அதன்பின்னர், அது மீண்டும் 2018 செப்தெம்பர் 15 ஆந் திகதி வர்த்தமானியில் வெளியிடுவதற்காக அமைச்சிற்கு அனுப்பிவைக்கப் பட்டது.

## 1.7 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்** | | |
| (i) விநியோகப் பிரிவுகளிலுள்ள மூலதன வேலைகளினை பூர்த்தி செய்வதிலுள்ள நீண்டகால தாமதம். | (i) பூரணப்படுத்திய தொழில்களை மாற்றும் செயன்முறை, அவர்களது நிறைவேற்று அணிக் கூட்டங்களில் குறித்த மாகாணங்களிலுள்ள பிரதிப் பொது முகாமையாளர்கள் மற்றும் பிரிவுகளின் உதவிப் பொது முகாமையாளர்ளினால் மேற்கொள்ளப்பட வேண்டிய வழமையான கண்காணித்தல் செயற்பாடாக உள்ளது. | பூரணப்படுத்திய வேலை களை உடனடியாக மாற் றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (ii) நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள சீஈபீயின் காணிகளின் அளவை, பெறுமதி கணிப்பீடு மற்றும் பாதுகாப்பை துரிதப்படுத்தல் | (ii) சீஈபீ காணிகளினது மதிப்பீட்டின் 28.10.2019 இல் உள்ளவாறான தற்போதைய நிலைவரம் கீழே காட்டப்பட்டுள்ளது. | சீஈபீ காணிகளின் நில அளவை மற்றும் பெறும தியிடுதல் செயன்முறை யினை துரிதப்படுத்துதல். |

பிரதான காணிகளின் பொழிப்பு (5 பேர்ச் இற்கு மேற்பட்ட விஸ்தீரணமுடைய காணிகள்)

| தொ/இ | பிரிவு | மொத்த மதிப்பீட்டுப் பெறுமதி | இனங்காணப்பட்ட காணிகளின் எண்ணிக்கை | பெறுமதியிடப்பட்ட காணிகளின் எண்ணிக்கை | பூரணப்படுத்தல் % |
|---|---|---|---|---|---|
| 1 | விநியோகப் பிரிவு 01 | 142 | 202 | 4,701,083,600 | 18% |
| 2 | விநியோகப் பிரிவு 02 | 275 | 362 | 2,172,974,000 | 8% |
| 3 | விநியோகப் பிரிவு 03 | 107 | 123 | 3,325,787,400 | 13% |
| 4 | விநியோகப் பிரிவு 04 | 127 | 148 | 3,289,450,000 | 13% |
| 5 | சொத்து முகாமைத்துவ பிரிவு | 4 | 5 | 5,718,828,500 | 22% |
| 6 | பரிமாற்றல பிரிவு | 61 | 118 | 6,885,541,300 | 26% |
| 7 | பிறப்பாக்கல் பிரிவு* | 1 | 1281 | 126,700,000 | 0% |
| **மொத்தம்** | | **717** | **2,239** | **26,220,364,800** | |

• காசல்ரீ நீர்த்தேக்க வளவுகள் (980 A 2R 13.5P), லக்ஷபான மின் நிலையம் மற்றும் கட்டிடத் தள வளவுகள் (202A 2R 39.3P), அனியகந்த சீஈபீ வளவுகள்

(3.6974) மற்றும் கொலன்னாவ சீஈபீ வளவுகளின் எல்லை மறுதிறப்பு மற்றும் மறு எல்லை நிர்ணயப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

- களனிதிஸ்ஸ சீஈபீ வளாகம் மற்றும் மௌசாகலே நீர்த்தேக்க வளவுகளின் எல்லை மறுதிறப்பு மற்றும் மறு எல்லை நிர்ணயப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன.
- உறுதிகள் ஒப்படைத்தல் சான்றிதழ்கள் போன்ற 1476 உரித்தாவணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.
- மேல் கொத்மலை நீர் மின்சாரச் செயற்திட்டம் மற்றும் லக்விஜய மின்வலு நிலையத்தின் காணிச் சுவீகார வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

| | | |
|---|---|---|
| (iii) வாகனங்களிற்கான நாளதுவரை யாக்கப்பட்ட தரவுத் தளத்தின் பராமரிப்பு. | (iii) சீஈபீ இன் சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு அதன் வாகனத் தரவுத் தளத்தைப் பராமரிக்கின்றது. அத்துடன், சீஈபீ இன் கிளைகளிலிருந்து பெறப்பட்ட விபரங்களிற்கமைய தொடர்ந்து தரவுத்தளம் புதுப்பிக்கப்படுகின்றது. 2019.10.03 ஆந் திகதியில் உள்ளவாறு நாளதுவரைக்கப்பட்ட பொழிப்பு இணைக்கப்படுகின்றது. (பின்னிணைப்பு 06) | சொத்துக்களின் முகா மைத்துவத் தரவுத் தளம் நாளதுவரையாக்கப் படு தல் வேண்டும். |

**(ஆ) இருப்புக் கட்டுப்பாடு**

| | | |
|---|---|---|
| (i)இருப்புப் பதிவேடுகளை முறையாக பேணுதல் | (i) சபை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளை பின்பற்றுகின்றது (ஜீஏஏபி). பிறப்பாக்கம், சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் பரிமாற்றல் பிரிவுகளின் இருப்புக்களை பெறுமதியிடுவதற்காக முதல் வந்தது முதல் செல்லல் முறையினை பயன்படுத்துவதுடன் விநியோகப் பிரிவு நியம விலையிடல் முறையினைப் பின்பற்றுகின்றது. இருப்புக்களினது கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய அனைத்துப் பதிவேடுகளும் “மிட்பின்” முறைமையிலுள்ள இருப்பு முறையின் ஊடாக பேணப்படுகின்றன. | பொருட்களின் பெறுவ னவு மற்றும் வழங்கல் முறைப்படி அறிவிக்க ப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii)இருப்பு பற்றாக்குறைகள் மற்றும் மிகைகளை தவிர்ப்பதற்கு நிலக்கரி இருப்பு கையாளல் மீது பொருத்தமான கட்டுப்பாடுகளை ஸ்தாபித்துப் பேணுதல். | (ii) விடயத்துடன் சம்பந்தப்பட்ட கன்வேயர் "0" இலிலுள்ள மின்னியல் நிறுவைத் தராசு கீழே காட்டப்பட்டவாறு புதுப்பிக்கப்பட்டுள்ளது.<br>1. அனைத்து உடைந்த/சேதமடைந்த இயந்திரப் பகுதிகள் புதுப்பிக்கப்பட்டன.<br>2. தேவையான மின்னியல்/I &C பாகங்கள் மாற்றப்பட்டன.<br>3. I & C பிரிவுடன் இணைந்த மாறும் அளவுத்திருத்தம் செயற்பட்டுவருகின்றது.<br>4. கருவிகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவு செயற்பாட்டில் உள்ளது. | பெறுவனவின் அடிப்ப டையில் நிலக்கரி இருப்பு அளவிடப்பட்டு உண்மை யான இருப்பின் பெறும தியை அங்கீகரிப்ப தற்காக ஆண்டின் இறுதி யில் இருப்பெடுத்தல் மேற்கொள்ளப்படுத ல் வேண்டும். |
| (இ) **செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு** | | |
| செயற்திட்டத்தை உரிய காலவரை யறைக்குள் பூர்த்தி செய்தல். | அனைத்துச் செயற்திட்டச் செயற்பாடுகளும் அறிக்கையிடல் தேவைப்பாடுகளும் செயற்திட்டப் பிரிவின் உதவிப் பொது முகாமையாளரால் கண்காணிக்கப்படுகின்றன. | செயற்திட்ட அமுலாக்கல் திட்டமிடப்பட்டவாறு இடம்பெறுதல் வேண்டும். |
| (ஈ)**கணக்கீட்டு முறைமை** | | |
| கணக்கீட்டு முறைமையில் காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் காரணமாக 2013 ஆம் ஆண்டு தொடக்கம் சீஈபீயின் நிதிக்கூற்றுக்கள் தொடர்ச்சியாக மீண்டும் முன்வைக்கப்படுகின்றன. | கணக்கீட்டு முறைமையில் காணப்படுகின்ற நலிவு காரணமாக திருத்தியமைத்து வரப்படுவதனைத் தவிர்ப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் திருத் தப்படுவதனை தவிர்ப்ப தற்காக உள்ளகக் கட்டுப் பாட்டு முறைமையினை பலப்படுத்துவதற்கு நடவ டிக்கை எடுத்தல் வேண் டும். |
| (உ) **செயற்பாட்டுக் கையேடு**<br>சபையின் சீரான செயற்பாடுக ளிற்கான செயற்பாட்டுக் கையேடு நாளதுவரையாக்கப்பட் டிருக்கவி ல்லை. | சீஈபீ தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகும். | சபையின் சீரான செயற் பாடுகளிற்காக செயற் பாட்டுக் கையேட்டை நாளதுவரையாக்கு தல் |

### 1.8 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.8.1 பெறவேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 19,038,547,212 வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் சாதாரண மற்றும் மொத்த வழங்கல்கள் இரண்டுடனும் தொடர்புடைய ரூபா 3,754,841,442 மீதி ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் அதில் ரூபா 1,827,399,804 தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடாதிருந்தது. மேலும் ரூபா 423,764,624 தொகை 2012 இலிருந்து இனங்காணப்படாதிருந்தது. | நீண்டகாலமாக நிலுவையிலுள்ள கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு சீஈபீ உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.<br>• ரூபா 841 மில்லியன் கடன்பட்டோர் மீதி தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>• ரூபா 385 மில்லியன் சர்ச்சைக்குரிய மீதிகளை தீர்வுசெய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டது.<br>• ரூபா 125 மில்லியன் கடன்பட்டோர் மீதியை பதிவழிப்புச் செயவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.<br>• நிலுவையான கணக்குகள் அனைத்தும் இறுதியாக்கப்பட்டு ஞாபகப்படுத்தல் கடிதங்களை அனுப்புதல், நடுவர் தீர்ப்பிற்கு அனுப்பிவைத்தல் போன்ற தொடர்ச்சியான அறவிடுதல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | மொத்தக் கடன்பட்டோரில் ஏறத்தாழ 20 சதவீதம் ஓராண்டிற்கும் மேலாக நிலுவையாக உள்ளது. ஆகையால், இறுதியாக்கப் பட்ட வாடிக்கையாளர் களை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ)லங்கா இலக்ரிசிற்றி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டிடமிருந்து (எல்ஈசீஓ) கிடைக்க வேண்டிய ரூபா 32,765,469 தொகை எந்தவொரு அறவீட்டு நடவடிக்கையும் எடுக்கப் படாமல் | சபையின் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர், ரூபா 32,765,469 நிலுவை மீதி கணக்குப் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டது. | ஏதேனும் சிக்கல்கள் காணப்படின் தொடர்ச்சி யாக நீண்டகாலத்திற்கு எடுத்துச் |

ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

செல்லாது தீர்த்தல் வேண்டும்.

(இ)ரூபா 2,505,752,812 கூட்டுத்தொகையான பின்வரும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தன.

| கடன்பட் டோர் பெயர் | தொகை ரூபா | விபரம் |
|---|---|---|
| பொதுத் திறைசேரி | 225,000,000 | வீதி வெளிச்சமிடல் மற்றும் பராமரிப்புக் கிரயத்தை அறவீடு செய்தல். |
| வூட் குறூாப் காஸ் ரேபைன் லிமிடட் | 8,264,352 | மேற்குக் கரையோர மின்வலு ஆலைக்கு உள்ளக வீதியொன்றை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் |
| மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு | 6,142,277 | கெரவலப்பிட்டிய இணைந்த மின்வலுப் பொறியின் திறப்பு விழாவிற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் |
| இலங்கை நிலைபெறுதகு எரிசக்தி அதிகார சபை | 897,025,999 | சிற்றளவு நீர்மின்சார அபிவிருத்தியாளர் களிற்கு இ.மி.ச. இனால் செலுத்தப்பட்ட கட்டணச் சீராக்கல். |
| ஏசஎஸ் கெலனிதிஸ்ஸ (பிறைவேட்) லிமிட்டட் | 1,368,961,445 | விலை வேறுபாடுகளின் கொடுப்பனவு மீது அறவிடப்பட வேண்டிய தொகை. |
| நொதர்ன் பவர் (பிரைவட்) லிமிடட் | 358,739 | 2011 ஆம் ஆண்டில் இ.மி.ச. இனால் பூரணப்படுத்திய விரிவாக்கல் வேலைக்காக பெறப்பட வேண்டிய மீதியாகும். |
| **மொத்தம்** | **2,505,752,812** | |

வீதி வெளிச்சமிடல் மற்றும் பராமரிப்புக் கிரயத்தை அறவீடு செய்தல்.

-----------------------------------------------

திறைசேரியிடமிருந்து (வீதி வெளிச்சமூட்டல் மற்றும் டிரான்ஸ்போமர்களை வாடகைக்கு வழங்குதல் போன்வற்றிற்காக) பெறப்பட வேண்டிய மீதியாகும். திறைசேரியால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களிற்கு அமைய செயற்திட்டக் கடன்கள் மீதான வட்டி மற்றும் கடன் தவணைகளிற்கு எதிராக இதனை எதிரீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்குக் கரையோர மின்வலு ஆலைக்கு உள்ளக வீதியொன்றை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப் பட்ட கொடுப்பனவுகள்.

-----------------------------------------------

தற்போது அப்பெயரில் நாட்டில் கம்பனியொன்று காணப்படாமையாலும் சட்ட உத்தியோகத்தரின் மேற்படி பதிலளித்தல் காரணமாகவும் இந்த மீதியினை பதிவழிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டு ள்ளதுடன் எதிர்காலத்தில் இது செயற்படுத்தப்படும்.
வூட் குரூப் வாயு டர்பனை கொழும்பு துறைமுகத்திலிருந்து பன்னிபிடிய தளத்திற்கு எடுத்துச்செல்ல அதன் டிரெய்லரை பயன்படுத்தி

எந்தவொரு வேலையின தும் கொடுக்கல் வாங்கல் இடம்பெறுகையில் அதற் கான செலவினத்தை அறவிடுவதற்கு உள்ளகக் கட்டுப்பாடு பலப்படுத்தப்ப டுதல் வேண்டும்.

யமைக்காக இத்தாலியின் பாகியோலிக்கு இந்தக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. இந்தக் கட்டணம் மேற்குக் கரையோர மின் உற்பத்தி நிலையத்துடன் தொடர்புடையது அல்ல. பிபொமு (ஈபி) டிரான்மிஸ்ஸன் அவர்களிடம் தொடர்புடைய கடிதம் இருக்கின்றது.

கெரவலப்பிட்டிய இணைந்த மின்வலுப் பொறியின் திறப்பு விழாவிற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்.

--------------------------------------

சீஈபீ இன் தலைவர் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் இடம் தனது CEB/CH/BS/Aud.Gen/17 ஆம் இலக்க 2018 யூலை 18 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இத்தொகையை தீர்க்குமாறு கோரியுள்ளார். ஆனால் இது தொடர்பாக எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

சிற்றளவு நீர்மின்சார அபிவிருத்தியாளர்களிற்கு இ.மி.ச. இனால் செலுத்தப்பட்ட கட்டணச் சீராக்கம்

------------------------------------------------

2019.10.10 ஆந் திகதி மின்வலு, எரிசக்தி மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவின் தீர்மானம் கிடைத்த பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். (பின்னிணைப்பு 04)

விலை வேறுபாடுகளின் கொடுப்பனவு மீது அறவிடப்பட வேண்டிய தொகை.

-----------------------------------------------

சீஈபீ இன் தலைவருக்கு முகவரியிடப்பட்ட மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சுச் செயலாளரின் 2012 மார்ச் 19 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 2011 யூலை முதல் அமுலாகும் வகையில் ஒடோடீசலுக்கு பிரயோகிக்கக்கூடிய சில்லறை விலைகள் ஏற்கனவே வழங்கிய ஒடோடீசலுக்கும் செல்லுபடியாகும் எனவும் சீஈபீ/ஐபிபி இன் மின்வலு பிறப்பாக்கலிற்காக எதிர்காலத்தில் அந்த விலையில் வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய, சீபிசீ பட்டியல்களை மறுசீரமைக்கும்.

அதற்கமைய, வரையறுக்கப்பட்ட ஏஈஎஸ் களனிதிஸ்ஸ (தனியார்) கம்பனியுடன் சீஈபீ இற்கு உடபடிக்கையொன்று காணப்பட்டதுடன், இது மின்வலு உற்பத்தியாளர்களிற்கான நலனாக கருதப்பட்டு, பின்னர் இலங்கை பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் கடனிலிருந்து அறவிடப்பட முடியும் என்பதனால் மின்வலு உற்பத்தியாளர்களின் கிரயத்தின் ஊடாக எரிபொருள் விலை தாக்கல் செய்யப்படுகின்றது.

எவ்வாறாயினும், முன்னைய சிட்டைகளைத் திருத்தாது 2011 ஒக்தோபரிலிருந்து இலங்கை பெற்ரோலியக் கூட்டுத்தாபனம் ஒரு லீற்றர் 76 வீதம் எரிபொருளை

| | | |
|---|---|---|
| | பட்டியலிட்டிருந்தது. ஆகையால் இத்தொகை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறவேண்டிய தொகையாக பதியப்பட்டது. ஆனால், இது 2015 பெப்ரவரியில் திருத்தப்பட்டு வரையறுக்கப்பட்ட ஏஈஎஸ் களனிதிஸ்ஸ (தனியார்) கம்பனியிடமிருந்து பெறப்பட வேண்டியதாக பதியப்பட்டது. ஆனால், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விலையினை சீராக்கினால் மாத்திமே இத்தொகையினை கடனாகக் கருதி வரையறுக்கப்பட்ட ஏஈஎஸ் களனிதிஸ்ஸ (தனியார்) கம்பனியிடமிருந்து சீஈபீ இற்கு அறவிட முடியும்.<br><br>2011 ஆம் ஆண்டில் பூரணப்படுத்திய விரிவாக்கல் வேலைக்காக பெறப்பட வேண்டிய தொகை.<br>-----------------------------------------------<br>இது நொதர்ன் பவர் இற்காக 2011 ஆம் ஆண்டில் இ.மி.ச. இனால் பூரணப்படுத்திய விரிவாக்கல் வேலைக்காக பெறப்பட வேண்டிய மீதியாகும். PPA இக் கிரயத்தை மாதாந்த பட்டியல்களிலிருந்து கழித்துக் கொள்வதற்கு தடுத்திருந்தமையால் இந்த மீதி புத்தகங்களில் காணப்படுகின்றது. இதனை நொதர்ன் பவருக்கு பட்டியலிடுதல் வேண்டும். | |
| (ஈ)ஐந்து வருடங்களுக்கு மேலாக லங்கா கோல் கம்பனியிடமிருந்து அறவிடப்படாதுள்ள ரூபா 714,965,435 நீண்டகால நிலுவை மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | லிபர்டி கொமொடிரீஸ் லிமிடட் மற்றும் தௌரியன் அயர்ன் ஸ்ரீல் கம்பனி ஆகியவற்றிற்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னர் இம்மீதி தீர்ந்துவிடும். அதுவரை தீர்மானமெடுத்தல் நிலுவையிலுள்ளது. | கிரயத்தை அறவிடுவதற்கும் சந்தர்ப்பக் கிரயத்தை தவிர்ப்பதற்கும் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ)சொத்து முகாமைத்துவப் பிரிவின் ஏனைய பெறவேண்யவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 153,734,062 ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 146,090,787 தொகை அரசாங்க நிவுனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியவையாகுமென்பதுடன் ஆரம்பத்திலிருந்தே இத்தெதாகைகளை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவின் சீஈ (மின்வலுப் பொறி), சீஈ (காற்றுச்சீராக்கி மற்றும் குளிரூட்டல்) மற்றும் சீஈ (பாரந்தூக்கி) ஆகியவற்றால் அரசாங்க நிறுவனங்களின் மின்பிறப்பாக்கல், காற்றுச் சீராக்கிகள் மற்றும் பாரந்தூக்கிகளின் வருடாந்த பேணுகைத் தொழில்களிற்காக அந்த நிறுவனங்களிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகைகளை இது பிரதிநிதித்துவம் செய்கின்றது. பராமரித்தல் வேலைகளைப் பொருத்த மட்டில், கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆரம்ப கட்டத்திலன்றி அந்த பராமரித்தல் வேலைகள் முடிவுற்ற பின்னரே கொடுக்கல் வாங்கலிற்காகன பெறுமதி அறவிடப்படுகின்றது. DGM (W&AS) இனால் ஞாபனப்படுத்தல்கள் மற்றும் வேலைகளை இடைநிறுத்துதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு குறித்த தொகைகளை அறவிடுவதற்காக பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன்விளைவாக அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகையினை 2018 இன் இறுதியளவில் ரூபா 146 மில்லியனாக குறைக்க முடிந்திருந்தது. இத்தொகை 2019 ஏப்ரல் இறுதியளில் ரூபா 139 மில்லியனாக மேலும் குறைவடைந்திருந்தது. இந்த நிலுவை தொடர்பில் முறைமைக் கணக்காய்வொன்றை மேற்கொள்ளுமாறு AGM (AM) இனால் உள்ளகக் கணக்காய்வாளர் | கொடுக்கல் வாங்கல் இடம்பெறுகையில் பெறவே ண்டியவற்றை அறிவிடுவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கேட்டுக்கொள்ளப்பட்டதுடன் அந்த அறிக்கைக்காக காத்திருக்கப்படுகின்றது. ஆந்த அறிக்கை கிடைத்த பின்னர் இது தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | |

**1.8.2 செலுத்த வேண்டியவை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)சீன இயந்திரப் பொறியியல் கம்பனிக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 4,834,319,648 தொகை இதுவரை தீர்க்கப்படாது ஒரு ஆண்டிற்கும் மேலாக நிலுவையாக காணப்பட்டது. | 2014 மற்றும் 2015 இற்குரிய நிலுவைகள் தீர்க்கப்பட்டன. 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவுகள் நிலுவையாக உள்ளன. தற்போதைய நிதி நிலைமையினைக் கருத்திற்கொண்டு இ.மி.ச. மாதமொன்றிற்கு யூஎஸ்டொ. 2 மில்லியனைத் தீர்க்கின்றது. | சேவை வழங்குனர்களுடன் பிணக்குகள் ஏற்படுவதனைத் தவிர்ப்பதற்காக பொறுப்புக் களைத் தீர்ப்பதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ)வியாபாரக் கடன்கொடுத் தோராகக் காட்டப்பட்டுள்ள ரூபா 2,713,788,005 தொகை ஒரு ஆண்டிற்கும் மேலாக தீர்க்கப்படாதுள்ளது. | நிலுவையிலுள்ள இந்த மீதியினைத் தீர்ப்பதற்காக சாத்தியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வழங்குனர்களுடன் பிணக்கு கள் ஏற்படுவதனைத் தவிர் ப்பதற்காக பொறுப்புக்க ளைத் தீர்ப்பதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |

**1.9 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ)2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தி ன் 28(3) ஆம் பிரிவு | சீஈபீயானது அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப் பட்டவாறு நுகர்வோர் வைப்பபுக்களிற்கான வட்டியை செலுத்தியிருக்காததுடன் 2018 ஆம் ஆண்டிற்காக இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவினால் | 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 3(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம், மின்சார தீர்வைகள் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் அனுப்பிவை க்கப்படுதல் வேண்டும்.இருப்பி னும், தற்போதைய மின்சாரத் தீர்வையானது, இ.மி.ச. | சட்டத்திலுள்ள தேவைப்பாடுக ளுடன் சபை இணங்கியொ ழுகுதல் வேண்டும். |

அறிக்கையிடப்பட்ட விலைவீதத்தை அடிப்படை யாகக் கொண்டு கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் அவற்றின் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா 1,562 மில்லியனாக இருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்படாத திரண்ட வட்டி ரூபா 3,526 மில்லியனாக இருந்தது.

இன் வணிகத்தை மேற்கொள்வதற்காக போதியளவு காசினை உருவாக்கு வதில்லை. சட்டத்திலுள்ள தொடர் புடைய விதிகள் வருமாறு;

3(1) இலங்கையிலுள்ள மின்சாரத் தொழிலிற்கான சிக்கன, தொழில்நுட்ப மற்றும் பாதுகாப்பு பிரமாணங்கள் என்ற வகையில் செயற்படுதல் ஆணைக்குவின் தொழிற்பாடாகுமென்பதுடன்,

(ஈ) - பாவனையாளர்களிற்கு சாத்தி யமான உச்ச சிக்கன மற்றும் வினைத்திறனான சேவை வழங்கப் படுவதனை உறுதிப்படுத்துவதற்காக, அனுமதிப்பத்திர தாரர்கள் மற்றும் ஏனைய மின்சார பொறுப்பாளர்களால் விதிக்கப்படு கின்ற தீர்வைகள் மற்றும் ஏனைய கட்டணங்களை ஒழுங்கமைத்தல்.

30(1) இப்பிரிவினை பின்வருவனவ ற்றிற்கு பிரயோகித்தல் வேண்டும்.

- மின்சார பரிமாற்றம் மற்றும் மொத்த விற்பனைக்காக பரிமா ற்றல் அனுமதிப்பத்திர தாரர்களால் விதிக்கப்பட்ட தீர்வைகள் அல்லது கட்டணங்கள் (இதனகத்துப் பின்னர் “பரிமாற்றல் மற்றும் மொத்த விற்பனைத் தீர்வைகள் என அழைக்கப்படும்); மற்றும்

- மின்சார விநியோகம் மற்றும் வழங்களிற்காக விநியோக அனுமதிப்பத்திர தாரர்களால் விதிக்கப்பட்ட தீர்வைகள் அல்லது கட்டணங்கள் (இதனகத்துப் பின்னர் "விநியோக மற்றும் வழங்கல் தீர்வைகள்" என அழைக்கப்படும்); மற்றும்

(2)சூழ்நிலைக்கேற்ப பரிமா ற்றல் மற்றும் மொத்த விற்பனைத் தீர்வைகளும் விநியோக மற்றும் வழங்கல் தீர்வைகளும் தொடர் புடைய அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை களிற்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

- அது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கிரயத்தை வெளிக்காட்டும் முறைக்கு அமை வாக குறித்த அனுமதிப்பத்திர தாரர்களால் ஏற்படுத்தப்பட்டதாக:

- வினைத்திறனான அடிப்படை யொன்றின் மீது அதற்குரிய அனுமதிப்பத்திரத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடு களை மேற்கொள்கையில் உறப் பட்ட நியாயமான அனைத்துக் கிரயங்களையும் அறவிடுவதற்கு தொடர்புடைய அனுமதிப்பத்திர தாரரை அனுமதிப்பதாக:

- பிரிவு 5 இன் கீழ் அமைச் சரவையால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை வழிகாட்டலிற்கு

அமைவாக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாக காணப் படுகின்ற: மற்றும்

- பொதுமக்களை அறிவுறுத்து வதற்காக ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு உரிய முறையில் வெளியிடப்பட்டும், இருத்தல் வேண்டும்.

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு விநியோக அனுமதிப்பத்திர தாரரும் (DL) அவற்றினது பாவனை யாளர்களின் பாதுகாப்பு வைப்புக்களிற்காக வட்டியினை செலுத்துதல் வேண்டும். அதிகாரச்சட்டத்தில் இக்கூற்று பின்வருமாறு காணப்ப டுகின்றது.

பிரிவு 28(3) – “இந்தப் பிரிவிற்கு அமைவாக பிணைப்பணம் என்ற வகையில் விநியோக அனுமதிப்ப த்திர தாரருக்கு வழங்கப்பட்டு அனுமதிப்பத்திர தாரரின் கைவசம் வைத்திருக்கப்படும் எந்தவொரு பணத் தொகையுமாகும். ஆணைக் குழுவின் அங்கீகாரத்துடன் அனும திப்பத்திர தாரரால் அவ்வப்போது திர்மானிக்கப்படுகின்ற அவ்வாறான வீதமொன்றில் அந்த பிணைப் பணம் மீது அனுமதிப்பத்திர தாரரின் கைவசம் வைத்திருக்கப்படுகின்ற அவ்வாறான காலப்ப குதிக்கு வட்டியினை செலுத்துதல் வேண்டும்”.

தற்போது இ.மி.ச. அதனது வணிகத்தை

நடாத்திச் செல்வ தற்கு போதியளவு பணத்தை சேகரிக்காமையின் விளைவாக அதனது பாவனையாளர்களின் பிணைவைப்புக்களை தொழிற்படு மூலதனத் தேவையின் ஒரு பகுதியாக பயன்படுத்துவதுடன எஞ்சிய தொழிற்படு மூலதனத் தேவையினை மேலதிகப்பற்றுக்கள், குறுங்காலக் கடன்கள் என்ற வகையில் வங்கி வங்கிகளிட மிருந்து பெற்றுக்கொள்கின்றது. இ.மி.ச. இனால் அதனது தொழிற்படு மூலதனத்தின் ஒரு பகுதியாக அதனது பாவனையாள ர்களின் பிணை வைப்புக்களை பயன்படுத்துவதன் மூலம், வங்கி மேலதிகப்பற்றுக்குச் செலுத்த வேண்டிய வட்டியினைச் சேமித்து அதனது பாவனையாளர்களிற்குப் பகிரப்படுகின்றமையால் கட்டண த்தை குறைக்கக்கூடியதாக உள்ளது. அதாவது, 2018 ஆம் ஆண்டில் இ.மி.ச அதனது அனைத்து பாவனையாளர்கள் மத்தியிலும் ரூபா 1,562 மில்லியன் தொகையினை பகிர்ந்திருந்தது. இந்த பிணைவைப்பினை வங்கி யொன்றில் வைப்புச் செய்திருப்பின் வட்டியினை உழைத்திருக்க முடியும் என்பதாக வரைபு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த பெறுமதியே இதுவாகும்.

இந்த பிரிவின் பிரகாரம் பிணை வைப்புக்கள் மீது DL வட்டியினை செலுத்தியிருப்பின் அது DL இற்கான நிதிச் சுமையாக சேர்ந்து தொழிலிற்கு மேலதிகக்

| | | | |
|---|---|---|---|
| | | கிரயத்தை தோற்றுவித்திருக்கும்.<br><br>ஆகையால், 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவை முழுமையாக நீக்குவதற்கு நாம் அமைச்சிற்கு பரிந்துரைத்து ள்ளதுடன் இது தொடர்பில் மேலதிக நடவடிக்கையினை எடுக்குமாறு அமைச்சினை கோரியுள்ளோம். | |
| (ஆ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டம் | | | |
| i. 47(2)(அ) பிரிவு | சீஈபீயின் அசையும் மற்றும் அசையாத ஆதனங்களிற்கான பெறுமானத்தேய்வை மேவுகை செய்வதற்காக சீஈபீ பொதுத் திறைசேரியுடன் பெறுமானத் தேய்வு ஒதுக்க மொன்றை ஸ்தாபித்து பேணலாம். எனினும் அத்தேவைப்பாட்டிற்கு முரணாக 2000 திசெம்பர் 31 வரை வருடாந்தம் ரூபா 1 மில்லியன் தொகையினை மாற்றம் செய்வதன் மூலம் அதனது நிதிக்கூற்றுக்களில் பெறுமா னத்தேய்வு ஒதுக்கமொன்றை சீஈபீ ஆனது ஸ்தாபித்திருந் ததுடன் அதன் பின்னர் எவ்வித அசைவும் இடம்பெற்றிருக்க வில்லை. அத்திகதியில் திரண் டிருந்த ரூபா 23 மில்லியன் தொகை | சீஈபீ இன் அசையும் மற்றும் அசையாத சொத்துக்களின் தேய்மானத்தை ஈடுசெய்யும் வகையில் பிரிவு 47(2)(அ) இன் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் தேய்மான ஒதுக்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. சி.இ.பி தொடர் ச்சியான நட்டங்களை சந்திப்ப தால் இந்த கணக்கு பல ஆண்டுகளாக நாளது வரையாக் கப்படவில்லை. இருப்பினும் சி.இ.பி இலாபம் ஈட்டியவுடன் உங்கள் கருத்துக்களை கவனத்தில் கொண்டு தேய்மான ஒதுக்கக் கணக்கை நாளது வரையாக்குவ தற்காக வருடாந்தம் ரூபா 1 மில்லியன் தொகை தேய்மான ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றப்படும்.<br><br>கோட்பாட்டளவில் காப்பீட்டு நிதியக் கணக்கு மீதி மற்றும் | சொத்து அடிப்படை யினைக் கருத்திற் கொண்டு, சொத்துக் களை மீளவைப்பத ற்காக ஒதுக்கம் பேணப்படுதல் வேண் டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 46 ஆம் பிரிவு மற்றும் 11(அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | எவ்வித மீளாய்வும் இன்றி தொடர்ச்சியாக நிதிக் கூற்றுக்களில் முன் கொண்டு வரப்பட்டிருந்தது<br><br>1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டின் இறுதி யிலும் உள்ளவாறான மொத்தம் நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியில் 0.1 சதவீதப் பங்களிப்பு காப்புறுதி பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்ற ப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந் நிதியத்தில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,070 மில்லியன் தொகையை மாத்திரம் சீஈபீ முதலீடு செய்திருந்தது. | எஸ்க்ரோ முதலீட்டு கணக்கு மீதி ஆகியவை ஒரு குறிப்பிட்ட திகதியில் இணக்கம் செய்யப்படுகின்றன என்பது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கணக்கு புத்தகங்களின்படி 2018-12-31 இல் உள்ளபடி காப்பீட்டு நிதியக் கணக்கு மீதி ரூ. 16,304 மில்லியன் ஆகவும், காப்பீட்டு முதலீட்டு கணக்கு மீதி ரூ. 8,070 மில்லியன் ஆகவும் காணப்பட்டது. இந்த வேறுபாடு முக்கியமாக காப்பீட்டு முதலீட்டு எஸ்க்ரோ கணக்கில் முதலீடு செய்யாததால் எழுந்துள்ளது, ஏனெனில் CEB பல ஆண்டுகளாக மோசமான பணப்புழக்க சூழ்நிலையை சந்திக்கிறது. 2018 ஆண்டு கூட சி.இ.பி ரூ. 30,458 மில்லியன் நட்டத்தை சந்தித்தது . இதன் விளைவாக, சி.இ.பி. சராசரியாக ரூபா 6பில்லியன் - ரூபா 7 பில்லியன் வங்கி மேலதிகப் பற்றுடன் இயங்குகிறது மற்றும் வங்கி கடன் கிட்டத்தட்ட ரூபா. 80 பில்லியன் ஆகும். எனவே, வங்கி மேலதிகப்பற்று / கடன் வசதியைப் பெற்று எஸ்க்ரோ கணக்கில் முதலீடு செய்வது பயனில்லை. இருப்பினும், சி.இ.பி பணப்புழக்க நிலை மற்றும் திரவ நிலைமை மேம்படுத்தப்பட்டவுடன் காப்பீட்டு நிதிய முதலீட்டு கணக்கில் மொத்த நிலையான சொத்துகளில் 1% க்கு சமமான முதலீட்டை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்து அடிப்படை யினைக் கருத்திற் கொண்டு, சொத்துக்களிற்கான ஏதேனும் இழப்பை அறவிடு வதற்காக ஒதுக்கம் பேணப்படுதல் வேண் டும். |

## 1.10 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உழைக்கும் போதே செலுத்தும் (பிஏவைஈ) வரிப்பொறுப்பை ஊழியர்களுக்கு மாற்றுவதற்காக 2015 மே 20 இல் கூட்டு உடன்படிக்கையை கருத்தில் கொள்ளும் போதும் 2007 திசெம்பர் 13 இல் சம்பள மீளாய்வின் போதும் அமைச்சரவை தீர்மானங்களை எடுத்திருந்தது. எனினும் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானங்களுக்கு முரணாக 2010 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியின் போது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து ரூபா 4,210,046,371 உழைக்கும் போதே செலுத்தும் வரியை கழிக்காமல் சீஈபீ அதன் சொந்த நிதியிலிருந்து அத்தொகையை செலுத்தியிருந்தது. மீளாய்வாண்டின் போது அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை ரூபா 915,698,241 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 35 சதவீத அதிகரிப்பாக காணப்பட்டது. | இ.மி.சபையின் ஊழியர்கள் உழைக்கும் போதே செலுத்தும் வரி பொறுப்புக்கு உட்படுகின்றமையால் அவர்களது உழைக்கும் போதே செலுத்தும் வரிப் பொறுப்பை இ.மி.சபை பொறுப்பேற்றிருந்தது. இது தொடர்பில் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சுக்கும் சம்பளங்கள் மற்றும் பதவியணி யினர் ஆணைக்குழுவிற்கும் பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டதுடன் தொழிற்சங்கங்களுடன் சில சுற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இருப்பினும், இணக்கப்பாடு ஏற்பட்டிருக்கவில்லை. 2018.01.04 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட கூட்டு உடன்படிக்கை 2018.04.23 ஆந் திகதிய 2068/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. ஆகையால், இணங்கப்பட்ட சம்பளத்தினை மாற்றுதல் கூட்ட உடன்படிக்கையினை மீறுவதாக உள்ளதுடன் சட்டரீதியான சிக்கல்களையும் அது தோற்றுவிக்கும். | உழைக்கும் போதே செலுத்தும் வரியை ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேலும் 2001 மே 20 ஆம் திகதிய 1706/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தால் குறித்துரைக்கப்பட்ட காசற்ற நலன்களின் பெறுமதி ஒவ்வொரு ஊழியரினதும் உழைக்கும் போதே செலுத்தும் வரிக் கணிப்பீட்டின் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். எனினும் சீஈபீயானது தனிப் பாவனைக்கான விடுதிகள், குடியிருப்புக்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்ற ஏற்பாடுகளிற்கான காசற்ற நலன்களை இந் நோக்கத்திற்காக கணக்கிற்கு எடுத்திருக்கவில்லை. | மேலும் 2001 மே 20 ஆம் திகதிய 1706/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தால் குறித்துரைக்கப்பட்ட காசற்ற நலன்களின் பெறுமதி ஒவ்வொரு ஊழியரினதும் உழைக்கும் போதே செலுத்தும் வரிக் கணிப்பீட்டின் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.<br><br>உழைக்கும் போதே செலுத்தும் வரி கணக்கீட்டிற்காக (PAYE) குடியிருப்புக்கள் மற்றும் தனியார் பயன்பாட்டிற்கான மோட்டார் வாகனம் போன்ற பணமற்ற சலுகைகளை கருத்திலெடு ப்பதற்காக 2018/GM/39/FM ஆம் இலக்க 526 ஆவது கணக்கு சுற்றறிக்கையின் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் புதிய உள்நாட்டு வருவாய் சட்டத்தை அமுல்ப்படுத்துவதன் மூலம அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதால் ஊநுடீ இன் அனைத்து பிரிவுகளும் இதற்கு இணங்க நியாயமான காலம் எடுக்கும். | உழைக்கும் போதே செலுத்தும் வரியை கணிப்பிடுகையில் அனைத்து காசற்ற நலன்களையும் கருத்திற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சீஈபீயினது தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 46,011 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 28,865 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தை விளைவித்திருந்ததனால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 17,146 மில்லியன் முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. நீர்மின்சார உற்பத்தி 59 சதவீதத்தினால் அதிகரித்தமையால், எரிபொருள் கிரயமும் மின்வலுக் கொள்வனவும் முறையே 28 சதவீதம் மற்றும் 5 சதவீதத்தால் குறைவடைந்தமையே இந்த முன்னேற்றத்திற்கான காரணங்களாகும். அத்துடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆளனிக் கிரயம், வங்கிக் கடன்களினதும் மேலதிகப்பற்றுக்களினதும் வட்டிக் கிரயம் மற்றும் சீபீசீ கொடுப்பனவுகளின் தாமதத்தின் மீதான வட்டி என்பன முறையே ரூபா 8,050 அல்லது 27 சதவீதம், ரூபா 4,636 அல்லது 68 சதவீதம் மற்றும் 1,466 அல்லது 68 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமையால் மின்பிறப்பாக்கம், பரிமாற்றம் மற்றும் விநியோகப் பிரிவுகளின் செயற்பாட்டு மற்றும் பேணுகைக் கிரயங்கள் முறையே 18 சதவீதம், 44 சதவீதம் மற்றும் 19 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

எனினும் ரூபா 73,406 மில்லியன் கூட்டுத்தொகையான ஆளணி வேதனங்கள், வரிச் செலவினம் மற்றும் பெறுமானத்தேய்வை கணக்கிற்கு எடுத்ததன் பின்னர் மீளாய்வாண்டிற்கான சீஈபீயின் பெறுமதிச் சேர்க்கை ரூபா 57,541 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 29,495 மில்லியனால் அல்லது 105 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 2.2 விகிதப் பகுப்பாய்வு

### 2.2.1 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீஈபீ இன் தொழிற்படு மூலதன நிலைமை ரூபா 37,987 மில்லியன் எதிர்மறைப் பெறுமதியாக இருந்த அதேநேரம் முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறு இது ரூபா 55,683 மில்லியன் நேர்மறைப் பெறுமதியாக இருந்தது. ஆகையால் மீளாய்வாண்டின் தொழிற்படு மூலதனம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 32 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 2.2.2 உரிமை மூலதனத்திற்கான கடன்

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீஈபீ இன் உரிமை மூலதன மீதியானது தொகுதியின் தொடர்ச்சியான தேசிய நட்டம் காரணமாக நேரொத்த 11 சதவீத வீழச்சியுடன் ஒப்பிடும் போது 8 சதவீதத்தால் வீழச்சியடைந்திருந்தது. மேலும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீஈபீ இல் ஈடுபடுத்தப்பட்ட மொத்த மூலதனத்தில் 23எசதவீதம் அல்லது ரூபா 297 பில்லியன் கடன்களினூடாக நிதியிடப்பட்டிருந்தது. அத்துடன், சீஈபீ இன் உரிமை மூலதனத்திற்கான கடன் விகிதம் முன்னைய ஆண்டில் 64 சதவீதத்திலிருந்து மீளாய்வாண்டில் 88 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

### 2.2.3 இலாபத்தன்மை

2017 ஆம் ஆண்டிற்கான ரூபா 20.34 ஆன அலகு ஒன்றிற்கான சராசரிக் கிரயத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் இது ரூபா 19.12 ஆக இருந்ததுடன் அலகொன்று ரூபா 16.29 சராசரி விலையில் விற்பனை செய்யப்பட்டது. (முன்னைய ஆண்டுச் சராசரி விற்பனை விலை அலகொன்றிற்கு ரூபா 16.26 ஆக இருந்தது). அதற்கிணங்க, மீளாய்வாண்டின் அலகொன்றுக்கான மொத்த நட்டம் ரூபா 2.83 ஆக இருந்ததுடன் அலகொன்றுக்கான ரூபா 4.08 ஆன முன்னைய ஆண்டுச் சராசரி மொத்த நட்டத்துடன் ஒப்பிடும் போது இது 31 சதவீத குறைவாக காணப்பட்டது. பின்வரும் அட்டவணையானது கட்டண வகைப்படுத்தலையும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்ட மின்சாரத்தின் அலகொன்றிற்கான (கேடபிள்யூஎச்) பங்களிப்பையும் காட்டுகின்றது.

| **வகை** | **அலகொன்றிற்கான பங்களிப்பு (kWh)** | |
|---|---|---|
| | **2018** | **2017** |
| | **ரூபா** | **ரூபா** |
| உள்நாடு | (5.52) | (6.86) |
| மதத்தலங்கள் | (11.84) | (13.13) |
| பொது நோக்கம் | 4.66 | 3.40 |
| ஹோட்டல் | (1.50) | (2.61) |
| கைத்தொழில் | (4.40) | (5.57) |
| அரசாங்கம் | (0.89) | (2.08) |
| எல்ஈசீஓ இற்கான மொத்த வழங்கல்கள் | (3.59) | (4.55) |
| வீதி விளக்குகள் | (19.12) | (20.34) |
| **அலகொன்றிற்கான பங்களிப்பு** | **(2.83)** | **(4.08)** |

இதற்கமைய, பொது நோக்கத்தின் கட்டண வகைப்படுத்தல் மாத்திரமே மீளாய்வாண்டின் மொத்தப் பங்களிப்பிற்கு நேர்க்கணியப் பங்களிப்பாளராக இருந்தது. கைத்தொழில் மற்றும் உள்நாட்டு வகைப்படுத்தல் மீதான கட்டணம் மீளாய்வாண்டிற்கான மொத்தப் பங்களிப்பிற்கு ஆகக்கூடிய எதிர்க்கணியப் பங்களிப்பாளராக இருந்ததுடன் மதத்தலங்கள், ஹொட்டேல், அரசாங்கம், எல்ஈசீஓ இற்கான விற்பனைகள் மற்றும் வீதி விளக்குகள் மீதான கட்டணமும் அதற்குரிய சாதகமற்ற பங்களிப்புக்களை காட்டியிருந்தன.

## 2 செயற்பாட்டு மீளாய்வு

### (i) மின்வலு உற்பத்தி மற்றும் நேர்க் கிரயம் (வழங்கல் மற்றும் பரிமாற்றல் கிரயம் தவிர)

நாட்டிற்கு குறைந்த கிரயத்தில் மின்சாரத்தை விநியோகிப்பது இ.மி.ச. இன் பிரதான நோக்கமாக உள்ள போதிலும் மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகளிலுள்ள சாதகமற்ற நிபந்தனைகள், அனல் மின்வலு உற்பத்திக்காக ஏற்பட்ட உயர் கிரயம் மற்றும் காற்று மற்றும் ஏனைய மாற்றலற்ற புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களிலிருந்தான குறைந்த பங்களிப்புக் காரணமாக சீஈபீயால் இந் நோக்கத்தை அடைய முடியாதிருந்தது.

மேலும் இ.மி.ச.இன் நீண்டகால உற்பத்தித் திட்டம் மற்றும் பரிமாற்றல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதில் குறிப்பிடத்தக்களவு தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. இதன் விளைவாக இ.மி.ச. அவசர மின்வலுக் கொள்வனவுகளை மேற்கொண்டிருந்தமையால் இ.மி.ச. இன் ஆகக் குறைந்த கிரய நோக்கத்தை மோசமாக பாதித்திருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு 2018 ஆம் ஆண்டிற்கான மின்வலு உற்பத்தி நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

| மூலம் | 2018 | 2017 | அதிகரிப்பு /(குறைவு) | |
|---|---|---|---|---|
| | GWh | GWh | GWh | % |
| நீர்மின் | 6,381 | 4,004 | 2,377 | 59 |
| அனல்மின் | 3,629 | 5,045 | (1,416) | (28) |
| நிலக்கரி | 4,764 | 5,103 | (339) | (7) |
| காற்று | 326 | 367 | (41) | (11) |
| ஏனைய மாற்றலற்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி | 185 | 152 | 33 | 22 |
| கூரைக்கு மேலான சூரியசக்தி | 88 | - | 88 | - |
| **மொத்தம்** | **15,373** | **14,671** | **702** | **5** |

அதற்கமைய, அனல்மின் மற்றும் காற்று மின்வலுக் கொள்வனவு மீளாய்வாண்டில் முறையே 28 சதவீதத்தினாலும் 11 சதவீதத்தினாலும் குறைவடைந்திருக்க நாட்டில் நிலவிய சாதகமான காலநிலை காரணமாக நீர்மின்சார உற்பத்தி 59 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

**(ii)நேர்க் கிரயம்**

-------------------

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டிற்கான நேர்க் கிரய மூலப் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

| விடயம் | 2018 | | 2017 | |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | சதவீதம் | ரூபா மில்லியன் | சதவீதம் |
| எரிபொருள் | 41,553 | 21 | 57,842 | 27 |
| நிலக்கரி | 38,823 | 20 | 37,505 | 18 |
| நிலக்கரி மின்வலுக் கொள்வனவு | 84,497 | 44 | 89,254 | 42 |
| செயற்பாடு மற்றும் பராமரிப்பு | 13,812 | 7 | 11,727 | 6 |
| பெறுமானத்தேய்வு | 14,744 | 8 | 14,476 | 7 |
| **மொத்த நேர்க் கிரயம்** | **193,429** | **100** | **210,804** | **100** |

மேற்படி தகவல்களின் படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது நீர்மின்சார உற்பத்தி 59 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், மின்வலுக் கொள்வனவுக் கிரயங்கள் மற்றும் எரிபொருள் கிரயங்களின் விளைவாக 2018 ஆம் ஆண்டிற்கான அக்கியரங்கள் முறையே ரூபா 4,757 மில்லியன் மற்றும் ரூபா 16,289 மில்லியனால் அல்லது 5 சதவீதம் மற்றும் 28 சதவீததத்தால் அதிகரித்திருந்தன. அதேவேளை, செயற்திட்டங்களின் செயற்பாட்டு மற்றும் பேணுகைக் கிரயங்கள் மீளாய்வாண்டின் போது 11 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அத்துடன், மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகளிலுள்ள நிபந்தனைகள் காரணமாக மின்வலு உற்பத்திக்கான நிலையான கிரயங்கள் தவிர்க்க முடியாதவையாக காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டதுடன் இதன் விளைவாக, பொதுமக்களிற்கு குறைந்த கிரயத்தில் மின்சாரத்தை விநியோகிப்பது என்ற சீஈபீயின் பிரதான நோக்கத்தை அதனால் அடைய முடியாது போயிருந்தது.

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| போக்குவரத்துச் செய்யத்தக்க 1 MW இயலளவுடைய 50 மின்பிறப்பாக்கிகளை கொள்வனவு செய்வதில் (மதிப்பிடப்பட்ட கொள்வனவுப் பெறுமதி ரூபா 3 பில்லியன்) குறிப்பிடத்தக்க காலதாமதம் (2016 ஏப்ரல் முதல் 2019 மே வரை) அவதானிக்கப்பட்டதுடன், மின்பிறப்பாக் கிகளை பயன்படுத்துதல் அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான குறிக்கோளிற்கு முரணாக காணப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட் டுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சில குறித்துரைத்தல்களை கொள்வன வுச் சபை கருத்திற்கொள்ளாமையால் மின்பிறப்பாக்கிகளின் | 25 கொள்கலன்களுடன் கூடிய போக்குவரத்துச் செய்யத்தக்க டிரான்ஸ்போமர்கள் மற்றும் 25 கொள்கலன்களுடன் கூடிய எண்ணைத் தாங்கிகள் கொண்ட 1MW இயலளவுடைய 50 மின்பிறப்பாக்கிகள் நியமத்திற்கமைவான அமைச்சரவையால் நியமிக்கப் பட்ட கொள்வனவுச் சபையினதும் 2017.10.16 ஆந் திகதிய 17/2363/727/050/TBR ஆம் இலக்க சுற்றறிக்கையினதும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டன. அதற்கமைய, டீசல் மின்பிறப்பாக்கித் (DG) தொகுதிகள் இரு தரப்பும் இணங்கிக்கொண்ட சில மேம்படுத்தல்களுடன் கேள்வி | பிரதான மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய் கையில், சாத்திய வள ஆய்வு மேற் கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன், குறிக்கோள்களை அடைதல் தொடர் பில் முக்கிய கவ னம் செலுத்தப் படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| செயற்படுத்தல்கள் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரமாணங்களிற்கமைய பெற்றுக் கொள்ளப்பட்டன.<br><br>மின்பிறப்பாக்கிகள் பொருத்தப்பட்டு (1MWx10) துல்கிரியவில் 2019 சனவரி 25 ஆந் திகதியன்றும் கொலன்னாவ பிரிவு 01 (10X1MW) மற்றும் கொலன்னாவ பிரிவு 02 (10X1MW) ஆகியவற்றில் முறையே மார்ச் 22 மற்றும் 26 ஆந் திகதிகளில் வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தன. அத்துடன் மதுகமவில் ஏப்ரல் 07 (12X1MW) மற்றும் 2019 மே 02 (8X1MW) ஆந் திகதிகளில் செயற்பட ஆரம்பித்திருந்தன.<br><br>பொருத்தப்பட்ட மின்பிறப்பாக்கித் தொகுதிகள் செயற்பட்டு வந்திருந்தன. ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒப்பந்த காரரால், செயற்பாட்டுக் காலத்தின் போது இடம்பெற்றிருந்த செயற்பாட்டு மற்றும் பேணுகை பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட்டன.<br><br>தடைகளிற்கான காரணங்களைக் கண்டறிவதற்காக, இடம்பெற்றிருந்த தடைகளின் தொழில்நுட்பப் பகுப்பாய்வினை ஒப்பந்த காரர் வழங்கியிருக்கவில்லை. |

### 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை | முகாமைத்துவத்தின் கருத்துரை |
|---|---|---|
| (அ)மீளாய்வாண்டில் ரூபா 1,931,142,380 தொகை நிலக்கரி இருப்பு பற்றாக்குறையாக காண்பிக்கப்படுகின்றது. இருப்பினும், பொருள் மெய்மையாய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும், பௌதீக இருப்பு எடுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலக்கரி இருப்பு மீதியின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை. | PPM (LVPP) இனால் நியமிக்கப்பட்ட மெய்மைய்வு அணியினால் 2018.12.31 இல் உள்ளவாறான நிலக்கரி இருப்பு மெய்மையாய்வு செய்யப்பட்டதுடன், உள்படியான பொருள் பெறுவனவுப் பத்திரங்கள் (GRN)/வழங்கப்பட்ட தொகைகள் 2018.12.14 முதல் 2018.12.31 வரையிலுமான அம்மீதிக்குச் சீராக்கப்பட்டன. பௌதீக இருப்பிற்கு அமைய பேரேடு சீராக்கப்பட்டது. | இருப்பு பெறப்படும் வேளையில் அதனை அளவிடுவதற்கான நடைமுறை தாபிக் கப்பட்டு ஆண்டின் இறுதியில் பௌதீக இருப்பு மெய்மையா ய்வு மேற்கொள்ளப் படுதல் வேண்டும். |
| (ஆ)இ.மி.ச. பல வருடங்களாக மின்சாரத்தை லெகோ இற்கு விற்பனை செய்வதுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் திடமிருந்து எரிபொருளை கொள் வனவு செய்கின்ற போதிலும் இவ் இரண்டு நிறுவனங்களிற்கிடையே சுமூகமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக இவ் இரண்டு தரப்பினர்களுடன் கைச்சாத்திடப்பட்ட விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக் கைகள் காணப்படவில்லை. | இ.மி.ச. பல வருடங்களாக மின்சாரத்தை லெகோ இற்கு விற்பனை செய்வதுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்கின்ற போதிலும் இவ் இரண்டு தரப்பினர்களிடையே உடன்படிக்கைகள் கைச்சாத்திடப் பட்டிருக்கிவல்லை.<br><br>லெகோ கம்பனியினதும் இ.மி.ச. இனதும் உயர்நிலை உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழுவொன்று வரைவு உடன்படிக்கையொன்றை தயாரித்து சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தைக் கோரியுள்ளனர். இந்தக் குழு சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தின் பிரகாரம் தேவையான திருத்தங்களை மேற்கொண்டு இறுமி மின்வலு விற்பனை உடன்படிக்கையினை உதவிப் பொது முகாமையாளர் (பரிமாற்றம்) இற்குச் சமர்ப் பித்துள்ளது. குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் லெகோவின் 3 உத்தியோக த்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட சில திருத்தங்கள் தொடர்பில் இ.மி.ச. இன் பொது முகாமையாளர் லொகோவின் பொது | இந்த நிறுவனங்க ளிடையே பிணக்கு களைத் தவிர்ப்ப தற்காக உடன்படி க்கை கைச்சாத்திடப் படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | முகாமையாளருக்கு (தொடர்புக்கு 2015 மார்ச் 26 ஆந் திகதிய கடிதம்) அறிவித்துள்ளார். இந்த நிலைமையினை லெகோவின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கலந்துரையாடுமாறு இ.மி.ச. இன் பொது முகாமையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.<br><br>இருப்பினும், இது வரை எவ்வித பதிலையும் லொகோவிடமிருந்து இ.மி.ச. இற்குப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இது தொடர்பில் ஞாபனப்படுத்த லொன்று 2017.08.29 ஆந் திகதி லெகோவிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. இ.மி.ச. இற்கும் லேகோவிற்கும் இடையே மின்வலு கொள்வனவு உடன்படிக்கையொன்றை ஏற்படுத்துவதற்கு மின்சார வியாபார ஒழுங்குகள் பிரமாணமொன்று தேவைப்ப டுவதாகக் குறிப்பிட்டு இது தொடர்பில் 2018.07.24 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் லெகோ, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளது. | |
| (இ) இ.மி.ச. இன் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங் களை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதிகள் காலரீதி யாக பயன்படுத்தப்படாததன் கார ணமாக வழங்கப்பட்ட கடன்களி லிருந்து 2018 ஆம் ஆண்டில் கடனளிக்கும் முகவரால் கடப்பாட் டுக் கட்டணங்களாக ரூபா 125,736,811 தொகை கழிக்கப்பட் டிருந்தது. இருப்பினும், கணிப்பீ டுகள் இன்மை காரணமாக கடப்பாட்டுக் கட்டணங்களின் சரியான தன்மையினை மெய்மை யாய்வு செய்ய முடிந்திருக்க வில்லை. | கணக்காய்வாளரின் பட்டோலையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ள செயற்திட்டங்கள் கடன்வழங்கும் முகவர், கடன்பெறுநர் மற்றும் உடன்படிக்கை நிபந்தனை களிற்கு அமைய ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட தாகும். எவ்வாறாயினும், சகல செயற்திட்டங்களிற்கும் கடப்பாட்டுக் கட்டணம் பொதுவானதாக இருப்பதுடன், கடன் உடன்படிக்கைகளில் எந்தளவு தூரம் இறுக்கமான கட்டுப்பாடுகள் காணப்பட்ட போதிலும், இது தவிர்க்க முடியாததாகும்.<br><br>கடப்பாட்டு மற்றும் வட்டிக் கட்டணங்கள் பட்டோலையிலுள்ள முதல் மூன்று செயற்திட்டங்களின் ஒரு பகுதியாக காணப்படாததுடன் அரசாங்கத்தின் சார்பாக பொதுத் திறைசேரி கடப்பாட்டுக் | மேலதிக கடப்பா ட்டுக் கட்டணங்க ளைத் தவிர்ப்பதற் காக திட்டமிடப்பட்ட வாறு செயற்திட்டச் செயற்பாடுகள் அமுல்படுத்தப்படுத ல் வேண்டும். |

கட்டணங்களை பொறுப்பேற்கின்றது. எனவே திறைசேரியால் அது அறிவிக்கப்படும் வரை இ.மி.ச. ஆகிய எம்மால் அவ்வாறான கடப்பாட்டுக் கட்டணங்களை பதிவுசெய்ய முடியாதுள்ளது. ஆகையால், திறைசேரியிடமிருந்து தகவல் கிடைக்காத வரை அப்பெறுமதியை மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதுள்ளது.

ஏனைய செயற்திட்டங்களைப் பொருத்தளவில், வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் அறிக்கையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு கணக்குப் புத்தகங்களில் கடப்பாட்டுக் கட்டணங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. கடப்பாட்டுக் கட்டணங்கள் இச்செயற்திட்டங்களின் ஒரு பகுதியாக காணப்படுவதுடன் கடன் முகவரினால் அறிவிக்கப்பட்ட தொகைகள் வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன. இருப்பினும், செயற்திட்டப் பிரிவினது கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள தொகைகள் கணக்காய்வாளரின் தொகைகளுடன் இணங்கியிருக்கவில்லை என்பதனை இங்கு கவனித்தல் வேண்டும். சில செயற்திட்டங்கள் பல்லின ரீதியாகவும் கூறிடப்பட்டும் இ.மி.ச. இன் பல்வேறு பிரிவுகளால் கையாளப்படுகின்றமையே இதற்கான காரணங்களாகும். ஆகையால், கணக்காய்வாளரால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள தொகைகள் செயற்திட்டத்தின் பல்வேறுபட்ட கூறுகளின் திரண்ட தொகையாக காணப்படலாம்.

| | | |
|---|---|---|
| (ஈ) மின்வலுப் பொறிகளை நிர்மாணிப்பதில் தொடர்ச்சியான தாமதம் மற்றும் பொருத்தமான குறைந்த கிரயம் கொண்ட நீண்டகால மின்பிறப்பாக்கல் திட்டமொன்றை அமுல்படுத்தாமை போன்றன காரணமாக 2018 ஆம் | மேலே (ஈ) பந்தியில் உள்ளவாறு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு 2018 ஆம் ஆண்டில் 362GWh மின்வலுக் குறைவு காணப்பட்டது. ஆனால், 2018 ஆம் ஆண்டில் உள்ளபடியான பதிவேடுகளின் | குறைந்த கிரயக் குறிக்கோள்களை அடைவதற்காக குறைந்த கிரயம் கொண்ட நீண்டகால மின்பிறப்பாக்கத் திட்டங்களை சீஈபீ |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டில் மின் பிறப்பாக்கத்தில் 362GWh குறைவொன்று காணப்பட்டது. மேலும், கெரவல பிடியவில் 300 MW LNG மின் வலுப் பொறியினை நிர்மாணித் தலின் போது கொள்வனவு வழிகாட்டல்களை பின்பற்றியிரு க்காமையால் லக்தனவி (தனியார்) கம்பனியினால் இ.மி.ச. இற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது. | படி மொத்த மின்பிறப்பாக்கல் 15,917GWh ஆகவும் தேறிய மின்பிறப்பாக்கல் 15,305GWh ஆகவும் காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் மின்பிறப்பாக்கல் போதாமை காரணமாக ஏற்பட்டிருந்த எரிசக்தி குறைவு 0.8GWh ஆக இருந்தது. | கருத்திற்கொள்தல் வேண்டும். |
| **(உ)** | 2017 ஏப்ரலில் உதுறுவசந்தய செயற்திட்டத்தின் கீழ் 2014 இல் இனங்காணப்பட்ட ரூபா 52,550,929 இருப்பு பற்றாக்குறை தொடர்பாக உள்ளகக் கணக்கா ய்வுப் பிரிவால் விசேட புலனாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>எனினும், இந்த அறிக்கைத் திகதி வரையிலும் ரூபா 52,550,929 தொகையில் ரூபா 6,220,855 பற்றாக்குறைக்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. மேலும், இது தொடர்பில் 2015 இல் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் திருகோணமலை நீதவான் நீதி மன்றத்தில் நீதிமன்ற வழக்கொ ன்று (வழக்கு இல. பீ/1164/15) தொடரப்பட்டிருந்தது. மேலும் நீதிமன்ற வழக்கின் தற்போதைய நிலைமை தொடர்பான தகவல் கள் கணக்காய்விற்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | இருப்புக் குறைவு – 2014 ரூபா 46,330,071.90<br>திரு. யூ.பி. உதார குணரத்ன (P.F. No: 37475)<br><br>1) களஞ்சியக் காப்பாளர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அது தற்போது இடம்பெற்று வருகின்றது. நீதிமன்ற தீர்ப்பிற்காக காத்திருக்கப்படுகின்றது.(Case No. B/1164/15).<br><br>2) செயற்திட்ட பொருள் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அது தற்போது இடம்பெற்று வருகின்றது.<br><br>3) ரூபா 22,584,800.00 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை விநியோகிக்காது மோசடியாக பெற்றுக்கொண்ட தொகையினை Richardson Projects (pvt) Ltd என்ற கம்பனியிடமிருந்து 25 சதவீத சபைக் கட்டணத்துடன் சேர்த்து ரூபா 28,231,000.00 என்ற வடிவில் அறவிடுவதற்காக அக்கம்பனிக்கு இ.மி.ச. இன் சட்ட உத்தியோகத்தரினால் கேட்புக் கடிதமொன்று வழங்கப்பட்டுள்ளது. | குறித்த காலப்பகுதி யில் மோசடிகள் மீதான புலனாய்வு கள் நடாத்தப்பட்டு சீஈபீ இற்கான இழப் புக்களைத் தவிர்ப் பதற்காக புலனாய்வு அறிக்கையின் அடிப் படையில் உடனடி யாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க ப்படுதல் வேண்டும். |

4) களஞ்சியக் காப்பாளரான திரு. உதார குணரத்னவின் எஞ்சிய மீதிக்கு எதிராக சீராக்கத்தினை மேற்கொள்வதற்கு ரூபா 8,538,845.00 தொகை இனங்காணப்பட்டுள்ளது.
இருப்பினும், இந்த அறவிடல் சீராக்கத்தின் மெய்மையாய்வு மேலும் புலானாய்வு செய்யப்பட்டு முடிவாக்கப்படுதல் வேண்டும்.

5) இந்த நட்டத்திற்கு எதிராக ஏதேனும் சீராக்கம் தேவைப்படுகின்றதா என்பதனை கண்டறிவதற்காக பொருள் இருப்புக் கொடுக்கல் வாங்கல்களை பரிசோதிப்பதன் ஊடான மேலதிக மெய்மையாய்வு, தற்போது இடம்பெற்று வருகின்றது. ஆகையால், இந்த கடன்பட்டோர் நட்டத்தின் மீதி மேலும் குறைவடையக்கூடும்.

6) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட புலனாய்வின் பின்னர், ஆரோக்கியமான இருப்பு முகாமைத்துவத்தினையும் களஞ்சியக் கட்டுப்பாட்டு முறைமையினையும் தொடர்ச்சியாக பேணுவதற்கு பொருத்தமான தடுப்பு நடவடிக்கைகள் (புதிய பாதுகாப்பு கெமரா முறைமைகளைப் பொருத்துதல், களஞ்சியத்தைச் சுற்றியுள்ள மதிலை திருத்தியமைத்தல், களஞ்சியம் முழுவதும் பாதுகாப்பு வெளிச்சத்தைப் பொருத்துதல்) மேற்கொள்ளப்பட்டுள்ளன.

7) மேலே 3 ஆவது விடயத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட நட்டம் (அதாவது ரூபா 22,584,800.00), நீங்கலாக, எஞ்சிய பொருள் நட்ட மீதி, சீராக்கல் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் ரூபா 23,745,272 இலிருந்து ரூபா 15,150,417 வரை குறைக்கப்பட்டது.

8) மேலே விடயம் 7 மற்றும் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளின் படி, திரு. உதார குணரத்னவின் மீதி ரூபா 37,791,227 இற்கு குறைக்கப்படவுள்ளது.

9) செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் ரூபா 11,414,760,869 ஆனதுடன் மொத்தப் பொருள் நட்டம் ரூபா 37,791,227 ஆகும். ஆகையால், செயற்திட்டத்தின் பொருள் நட்டச் சதவீதம் 0.33% ஆகும்.

இருப்புக் குறைவு – 2015 – **ரூபா 6,220,855.50**

திரு. அசங்க ஜயகொடி (P.F. No. 37432)

ரூபா 4,212,810.00 தொகை ஏற்கனவே அகற்றப்பட்டுள்ளது. எஞ்சிய ரூபா 2,008,045 மீதி DGM (NP) இனால் 2017.05.04 ஆந் திகதிய NP/DGM/HRO/Inquiry கடிதத்தின் மூலம் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் தீர்மானம் கிடைக்கும் வரை நிலுவையாக உள்ளதுடன் குழுவின் தலைவரினால் இணங்கப்பட்டவாறு குறித்த அறிக்கை 2019.10.03 ஆந் திகதி DGM (NP) சமர்ப்பிக்கப்பட்டது. குறித்த ரூபா 2,510,057 இருப்புக் குறைவு நட்டத்தை (சபைக் கட்டணம் அடங்கலாக) களஞ்சியக் காப்பாளரிடமிருந்து (திரு. அசங்க ஜயகொடி P.F. No. 37432) அறவிடுவதற்கு 2019.10.09 ஆந் திகதிய NP/DGM/HRO/INQUIRY கடிதத்தின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் இந்த நட்டத்தை அறவிடுதல் ஆரம்பிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| (ஊ)2006 நவம்பர் 20 தொடக்கம் 2012 பெப்ரவரி 20 வரையான காலப்பகுதியின் போது சொத்து முகாமைத்துவப் பிரிவில் | மேற்படி மீதியானது இரண்டு களஞ்சியக் காப்பாளர்களில் ஒருவரான திரு. ஆர்.பீ. வெதகெதர என்பவருடன் | குறித்த காலப்பகுதியில் மோசடிகள் மீதான புலனாய்வுகள் நடாத்தப்பட்டு |

| | | |
|---|---|---|
| (மின்வலுப் பொறி) ஏற்பட்டிருந்த ரூபா 3,674,861 இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான நபர் தொடர்பாக முறையான புலனாய்வு முடிவடைந்திருந்த போதிலும் அந் நபரிற்கெதிராக 2018 ஆகஸ்ட் 16 வரை சபையால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதே ஊழியர் இன்னொரு அலுவலகத்தில் மோசடியொன்றில் ஈடுபட்டிருந்ததுடன் மோசடிப் பெறுமதியாக ரூபா 99,155 அறவிடப்பட்ட பின்னர் அவரது வேலை முடிவுறுத்தப்பட்டிருந்தது. | தொடர்புடையதாகும். இது கணக்காய்வுக் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி மோசடி குறித்து விசாரணையொன்றை நடாத்துமாறு குழு சீஈபீ இன் பொது முகாமையாளரை 2019.06.28 ஆந் திகதி இடம்பெற்ற கூட்டுத்தில் பணித்திருந்தது. | இ.மி.ச. இற்கான இழப்புக்களைத் தவிர்ப்பதற்காக புலனாய்வு அறிக்கையின் அடிப்படையில் உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (எ)ரூபா 3,789,893 இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் புலனாய்விற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்டவாறு நட்டம் அறவிடப்படாமல் 2011 ஒக்டோபர் 15 இல் ஓய்வு பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார். மேலும் மேற்படி பொருண்மையான தொகை சீராக்கல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல் கணக்குப் புத்தகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | மேற்படி மீதியானது இரண்டு களஞ்சியக் காப்பாளர்களில் ஒருவரான திரு. என்.பி.எல். சமரசிங்ஹ என்பவருடன் தொடர்புடையதாகும். இது கணக்காய்வுக் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி மோசடி குறித்து விசாரணையொன்றை நடாத்துமாறு குழு இ.மி.ச. இன் பொது முகாமையாளரை 2019.06.28 ஆந் திகதி இடம்பெற்ற கூட்டுத்தில் பணித்திருந்தது. | குறித்த காலப்பகுதியில் மோசடிகள் மீதான புலனாய்வுகள் நடாத்தப்பட்டு சீஈபீ இற்கான இழப்புக்களைத் தவிர்ப்பதற்காக புலனாய்வு அறிக்கையின் அடிப்படையில் உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 17,936,845,512 மொத்த நுகரத்தக்க இருப்பில் 11 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 2,051,605,881 தொகை 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெதுவாக அசையும், அசைவற்ற மற்றும் சேதமடைந்த இருப்புக்களாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. அசைவற்ற மற்றும் மெதுவாக அசையும் இவ் இருப்புக்களை பேணுதல் சேதங்கள், வைத்திருக்கும் கிரயம் மற்றும் மோசடிகள் | மெதுவாக நகர்வுறும், நகர்வுறாத மற்றும் சேதமடைந்த இருப்பின் உள்ளடக்கம் கீழே தரப்படுகின்றது.<br><br>**சதவீதம் %**<br>மெதுவாக நகர்கின்றவை 5<br>நகர்வுறாதவை 4<br>சேதமடைந்தவை 2<br>------<br>11<br>===<br><br>அநேகமான இருப்புக்கள் துருப்பிடிக்காதவையாகும். இ.மி.ச. இன் இந்த இருப்பு வகைகள் மின் | சேதங்கள், மேலதிக இருப்பு பேணல் கிரயம் மற்றும் மோசடிகள் இடம்பெறுவதற்கான சாத்தியத்தைக் தவிர்ப்பதற்காக மெதுவாக அசையும், அசைவற்ற மற்றும் சேதமடைந்த இருப்புக்களைக் குறைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| போன்றன அதிகரிப்பதற்கு காரணமாக அமைய லாம். | பிறப்பாக்கம், பரிமாற்றம் மற்றும் விநியோகத்திற்காக பயன்படுத்தப்படுப்படுகின்ற உதிரிப்பாகங்களும் பொருள் விடயங்களுமாகும். வணிகத்தின் தன்மை காணரமாக எந்தவொரு அவசர நிலைமைக்காகவும் இருப்பு இல்லாது போகின்ற நிலைமையினை தவிர்ப்பதற்காகவும் இந்த மெதுவாக நகர்வுறுகின்ற மற்றும் நகர்வுறாத இருப்புக்கள் வைத்திருக்கப்பட்டுள்ள. ஆகையால் 11 சதவீதத்தில் 9 சதவீதமான இருப்புக்கள் மாத்திரமே மெதுவாக நகர்வுறுகின்ற மற்றும் நகர்வுறாத இருப்புக்களாக உள்ளமையால் அவற்றை கைதவிர்க்க வேண்டிய தேவை எழவில்லை. சேதமடைந்த இருப்பினை (மொத்த இருப்புப் பெறுமதியில் 2 சதவீதத்தை) கைதவிர்க்கும் நடவடிக்கை குறித்த கிளை/பிரிவுத் தலைவரினால் ஆண்டுதோரும் மேற்கொள்ளப்படும் செயற்பாடாகும். எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை பின்னிணைப்பு 05 இல் உள்ளன. | |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இ.மி.ச. இன் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுத் திட்டம் (எஸ்ஓஆர்) நீண்டகாலமாக நாளதுவரையாக்க ப்பட்டிருக்கவில்லை. | திருத்தப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர் வுத் திட்டம் பணிப்பாளர் சபையின் அங்கீகரிப் புக்காக 2016 இல் சமர்ப்பிக்கப்பட்டது. வரைவு ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்த் திட்டத்தினை சபையின் அனைத்து தொழிற்சங்கங்களிற்கும் அவற்றின் பார்வையிடலுக்காகவும் ஆலோச னைகளிற்காகவும் சுற்றிக்கையின் மூலம் அறிவிக்குமாறு பணிப்பாளர் சபை முகாமைத்துவத்தனை பணித்திருந்தது.<br><br>அதற்கமைய, தொழிற்சங்கங்களினது பார்வை யிடல் மற்றும் ஆலோசனைகளின் பின்னர் 2017 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும், இந்த ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்த் திட்டத்தினை மீளாய்வுசெய்யுமாறு மீண்டும் பணிப்பாளர் சபை | ஆட்சேர்ப்புத் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு உடனடியாக நடவடிக் கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கோரியிருந்ததுடன், அதற்கமைய குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்த நிலைமையில் இதுவரை எவ்வித மாற்றமும் காணப்படவில்லை. | |
| (ஆ)மனித வளப் பிரிவிலுள்ள பிரதான பதவியாக பிரதிப் பொது முகாமை யாளர் (ஆளணி) உள்ள போதிலும் அப்பதவிக்கு தேவையான தகைமை கள் மற்றும் அனுபவங்கள் ஆட்சேர்ப் புக்கள் மற்றும் பதவியுயர்வுத் திட்டத்தில் (எல்ஓஆர்) குறித்துரைக் கப்பட்டிருக்காததுடன் ஏனைய சேவை கள் விசேடமாக மின் பொறியியலா ளர்களிற்கு இப்பதவிகளை பெற்றுக் கொள்வது இயலுமானதாக இருந்தது. | இந்த விடயம் பொது முயற்சிகள் குழுவின் கவனத்திற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன், பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரைகள் மீது மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சுச் செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழு, பிரதிப் பொது முகாமையாளர் (ஆளணி) பதவியானது பிரதிப் பொது முகாமையாளர் மட்டத்திலுள்ள சிரேஷ்ட பொறியியலாளர் ஒருவரினால் நிரப்பப்படுதல் பயனுள்ளது என இனங்கண்டுள்ளது. | பிரிவுத் தலைவரின் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் ஆட்சேர்ப் புத் திட்டத்தில் உள்ளட க்கப்படுதல் வேண்டும். |
| (இ) தற்போதுள்ள எஸ்ஓஆர் இன் பிரகாரம், மொத்த மனிதவள உத்தியோகத்தர் (எச்ஆர்ஓ) பதவியணியில் 50 சதவீத மானவை வெளியிலிருந்து நிரப்பப்ப டுவதுடன் அந்த சதவீதத்தை ஆண்டி ற்கு ஆண்டு படிப்படியாக 85 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டி ருந்தது. எவ்வாறாயினும் சீஈபீயின் வரலாற்றில் இரண்டு பொறியிய லாளர்கள் பிரிவுத் தலைவர்களின் தொழிற்பாடுகளை நீண்டகாலமாக மேவுகை செய்திருந்ததால் பதவியு யர்வுத் திட்டத்தில் அவ்வாறு வெளிவாரியாக ஆட்சேர்ப்புச் செய்ய ப்பட்ட ஊழியர்களிற்கு தெளிவான பதிவியுயர்த்தல் பாதையொன்று அவதானிக்கப்பட்டிருக்க- -வில்லை. | இ.மி.ச. முழுமையாக பொறியியல் அடிப்படையிலமைந்த நிறுவனமாக காணப்ப டுகின்றமையால், நிறுவனத்தின் உயிர் நாடியினையும் வேலைப்படையினையும் அறிந்துவைத்துள்ள பொறியியலாளர்களினால் அதன் பிரதான பதவிகள் வகிக்கப்படுதல் வேண்டும். ஆகையால், ஆளனிக் கிளையி லுள்ள இரண்டு பிரதான பதவிகள் பொறியியலாளர்களால் வகிக்கப்படுகின்றன. ஏனெனில் பொது முகாமையாளர் சார்பாக அவரால் பகிரப்பட்டுள்ள முக்கிய தொழிற்பாடு களில் இரண்டு பொறியியலாளர்கள் தொடர்புபடுகின்றனர். அந்த இரண்டு பொறியியலாளர்களும் பொது முகாமையா ளரால் விபரிக்கப்பட்ட தொழிற்பாடுகளை செய்கின்றனர். ஆகையால், இப்பதவிகள் மனித வள பதவியுயர்வுகளிற்கு மிகவும் சிக்கலான விடயமாக இருக்கவில்லை. அத்துடன், இந்த இரண்டு பதவிகளினதும் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு இ.மி.ச. இன் பொது முகாமையாளர், இந்த இரண்டு பதவிகளில் ஒரு பதவிக்காக மனிதவள முகாமைத்துவத்தில் பட்டப்பின்படிப்பு தகைமையை பெற்றிருந்த பொறியியலாளர் ஒருவரை நியமித்திருந்தார். | வெளிவாரியாக ஆட்சேர் க்கப்பட்ட ஊழியர்களிற் கு தெளிவான பதவியு யர்வு முறையினைக் காட்டும் விதத்தல் ஆட்சேர்ப்புத் திட்டம் திருத்தப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ)மனித வள முகாமையாளர் (எச்ஆர்எம்) மற்றும் மனித வள உத்தியோகத்தர் (எச்ஆர்ஓ) நேரடி யாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற் குத் தேவையான அனுபவமானது 100 ஊழியர்களிற்கு மேற்பட்ட நிறுவன மொன்றில் மனித வளத் துறையில் 06 ஆண்டுகளாக உள்ளமை சீஈபீயில் கையாளப்பட வேண்டிய பதவியணிப் பலத்துடன் ஒப்பிடும் போது அது போதுமானதாக காணப்படவில்லை. | இந்த விடயம் பதிவியுயர்வு மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்துடன் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட திருத்திய பதிவியுயர்வு மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் தெளிவாக்கப்பட்டுள்ளது. | திருத்திய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு உடனடி யாக அங்கீகாரம் பெறப் படுதல் வேண்டும். |
| (உ)தலைமைச் சட்ட உத்தியோகத்தர் மற்றும் மின் பொறியியலாளர் (DCC) NCP ஆகிய இரண்டு பிரதான பதவிகள் நீண்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டு வருகின்றன. | தலைமைச் சட்ட உத்தியோகத்தர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக செய்திப் பத்திரிகை ஊடாக விளம்பரம் செய்து விண்ணப்பங்களைக் கோருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மின் பொறியியலாளர் (DCC) NCP பதவி வெற்றிடம் மின்னியல் பொறியியலாளர் ஆட்சேர்ப்பு முடிவடைந்த பின்னர் நிரப்பப்படும். | நிறுவனத்தின் செயற் பாடுகளை வினைத்திற னாகவும் பயனுறுதியா கவும் பேணிச்செல்வ தற்கு பிரதான பதவி வெற்றிடங்கள் குறுகிய காலத்தில் நிரப்பப்படுதல் வேண்டும். |